பக்கங்கள் - 27

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | புரட்டாதி 29 புதன்கிழமை 15.10.2025 | அதிர்வு 76

## கூட்டுப் பயணம்: ஐ.தே.க. இன்று முக்கிய முடிவு!



"இந்த அரசு வீழ்ச்சியடைந்தால் நாட்டைப் பொறுப்பேற்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாராகவே உள்ளது. அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என்பவற்

02▶



# குருந்தூர்மலையில் மீண்டும் தமிழர் நிலங்கள் ஆக்கிரமிப்பு

## அநுர அரசு ஆட்சியிலும் தொடர்கின்றது அடாவடி

(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவு, குருந்தூர்மலை விகாரைச் சூழலிலுள்ள தமிழ் மக்களின் விவசாய நிலங்களை ஆக்கிரமித்து "தொல்லியல் தளம்" என்கின்ற அறிவித்தல் பலகை நிறுவப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் பூர்வீக விவசாய நிலங்களில் விவசாயம் செய்ய முற்பட்ட விவசாயிகளை அங்குள்ள கல்கமுவ சாந்தபோதி தேரர் பொலிஸாரிடம் பிடித்துக் கொடுத்து சிறையில் அடைந்திருந்தமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

05▶




யுத்தத்தில் பாதிக்கப்பட்டோருக்கு நஷ்ட ஈடுகளை வழங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் இழப்பீட்டு அலுவலகத்திற்கு உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பாக அரசமைப்புக்கு கவுன்ஸிலில் இடம் பெற்ற விடயங்களை நேற்று என் பத்தியில் கோடி காட்டியிருந்தேன்.

அதை வாசித்து விட்டு இந்த விடயங்களில் நன்கு பரிச்சயமான வயதில் மூத்த ஒருவர் நேற்று காலையில் அழைப்பு எடுத்தார்.

"தம்பி, இந்த விடயங்களை யாராவது வெளியே கொண்டு வர மாட்டார்களா என்று ஆதங்கத்துடன் எதிர்பார்த்தேன். நீங்கள் வெளிப்படுத்தி இருந்தாலும், அந்தத் தகவல் முழுமையானது அல்ல. எனக்குத் தெரிந்த சில விடயங்களை உங்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்." - என்றார் அந்த மூத்த பிரஜை.

05▶






# இறுதி வேட்டு வரை போரிட்ட ஒரு தலைவரே பிரபாகரன்!

## அவருக்கு என்றும் என் மரியாதை உண்டு என முன்னாள் இராணுவத் தளபதி பொன்சேகா புகழாரம்

"போர்க் களத்தில் இருந்து தப்பியோடாமல், இறுதி வேட்டு வரை போராடி உயிர் நீத்தமைக்காக விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மீது எனக்குத் தனிமரியாதை உண்டு."

– இவ்வாறு முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"பிரபாகரன் எமது எதிரணியாக இருந்தாலும், தப்பியோடாமல் இறுதி வரை சமரிட்டார். அதற்குரிய கௌரவத்தை அவருக்கு நான் வழங்கி வருகின்றேன்.

போர்க் களத்தில் இருந்து தப்பியோடாமல், இறுதி வேட்டு வரை பிரபாகரன் போரிட்டார்.

எனவே, இந்த விடயத்துக்காக முன்னாள் இராணுவத் தளபதி என்ற அடிப்படையில் பிரபாகரன் மீது எனக்கு எப்போதும் தனியான மரியாதை உள்ளது." – என்றார்..

# வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகக் கூறி 30 கோடி ரூபா மோசடி செய்த நபர் கைது!

## ஒக்டோபர் 25 ஆம் திகதி வரை விளக்கமறியல்

(எஸ்.நிதர்ஷன்)

வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகக் கூறி, 30 கோடி ரூபா நிதியை அபகரித்த நபர் ஒருவர், யாழ்ப்பாணம் நிதிக் குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்.அரியாலைப் பகுதியைச் சேர்ந்த 38 வயதான அல்பிரேட் எட்வேட் றொசான் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.



வவுனியா மற்றும் யாழ்ப்பாணத்தில் மேற்படி நபர் தொடர்பில் தலா நான்கு முறைப்பாடுகள், பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்ட நிலையில், யாழ். நிதிக் குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி சந்தேகநபர், மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட வேளை, எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## கூட்டுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றின் இணைந்த பயணம் தொடர்பில் இன்று புதன்கிழமை சாதகமானதொரு முடிவு எடுக்கப்படும்."

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதவாது:–

"பொய்யுரைக்கும் அரசியலை முடிவுக்கு கொண்டுவருவதற்கும், நாட்டுக்காக பொதுவானதொரு வேலைத்திட்டத்துடன் முன்னோக்கி செல்வதற்கும் நாட்டு மக்கள் முன்வந்துள்ளனர்.

2022 ஆம் ஆண்டு ஜுலை மாதம் எட்டாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியெற்றபோது, தேசிய வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு இணையுமாறு அழைப்பு விடுத்தார். இந்தத் திட்டத்துக்கு அப்பால் சென்று எதையும் செய்ய முடியாது.அவ்வாறு செய்ய முடியும் எனக் கூறுவது பொய்யாகும். அவ்வாறு பொய்யுரைத்தால் மக்கள் அவர்களை வீதியில் தாக்குதல் நிலை ஏற்படும்.

ஐக்கிய மக்கள் சக்தி எடுத்த தீர்மானம் பற்றி இன்று புதன்கிழமை நடைபெறும் ஐக்கிய தேசியக் கட்சியின் முகாமைத்துவக்குழு மற்றும் செயற்குழு கூட்டங்களில் ஆராயப்பட்டு, சாதகமான முடிவு எடுக்கப்படும்

ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்த பயணத்தை விட சிறப்பான பயணத்தை இந்த அரசால் முன்னெடுக்க முடியுமா? முடியாது என்பதே எனது கருத்தாகும். நாம் கொண்டு வந்த சட்ட திட்டங்கள் மீறப்பட்டு வருகின்றன.

அப்படியானால் அரசின் வீழ்ச்சி ஆரம்பமாகின்றது. அவ்வாறான நிலை ஏற்பட்டால் நாட்டை ஐ.தே.க. பொறுப்பேற்கும். அது பற்றி குழப்பமடையத் தேவையில்லை." – என்றார்.



# யாழ். புதிய பஸ் நிலையத்தின் இயங்கு நிலை குறித்து மாவட்ட செயலகத்தில் நேற்று முக்கிய கலந்துரையாடல்

"யாழ்ப்பாண நகரம் நெரிசல் மிக்கதாகவும் நெருக்கடி மிக்கதாகவும் மாறியுள்ளது. அவற்றை ஒழுங்கமைக்க – சீரமைக்க வேண்டிய தேவை, பொறுப்பு அனைவருக்கும் உள்ளது. அதற்கு அமைவாக நெடுந்தூர, குறுந்தூர பஸ் சேவைகள் புதிய மற்றும் பழைய பஸ் நிலையங்களில் இருந்து இயக்கப்பட வேண்டியுள்ளது."

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் புதிய பஸ் நிலையத்தின் இயங்கு நிலை தொடர்பான கலந்துரையாடல் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கலந்துரையாடலின் ஆரம்பத்தில் யாழ். மாவட்ட செயலர் ம.பிரதீபன், கூட்டத்தின் நோக்கம் தொடர்பில் தெளிவுபடுத்தினார்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த ஆளுநர்,

"யாழ். நகரத்தில் பஸ் நிலையம், வைத்தியசாலை, வர்த்தக நிலையங்கள் என்பன அமைந்துள்ளன. இதனால் யாழ். நகரின் எதிர்கால அபிவிருத்தி நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. ஏனைய மாவட்டங்களிலுள்ள நகரத்தைப் போன்று எமது நகரைத்தையும் மாற்றுவதற்கு ஒத்துழைக்க வேண்டும். எல்லோருக்கும் நகரத்தின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க வேண்டும் என்ற எண்ணம் உள்ளது. எனவே, அதை நோக்கியதாக பஸ் நிலையத்தின் செயற்பாடுகளை நாம் ஒழுங்குபடுத்த வேண்டும்." – என்றார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினரும் போக்குவரத்து தொடர்பான செயற்குழுவின் தலைவருமான க.இளங்குமரன்,

"பொதுப் போக்குவரத்தை மக்களின் தேவைக்கானதாக மாற்றுவதே அரசின் இலக்கு. தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபை என்பன இணைந்து செயற்பட வேண்டும். அதனடிப் படையிலேயே யாழ். மாவட்டத்திலும் சேவைகள் நடைபெற வேண்டும் என எதிர்பார்க்கின்றோம்." – என்றார்.

இதன் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், "யாழ். நகரப் பகுதியில் இருந்து பஸ் நிலையம் அகற்றப்பட வேண்டும் என்பதே நிபுணர்கள், பொது அமைப்புக்களின் கருத்தாக உள்ளது." – என்று குறிப்பிட்டார்.

இதேவேளை, யாழ். நகரத்தின் இயங்கு நிலை என்பது பஸ் நிலையத்தின் செயற்பாட்டில் தங்கியுள்ளது. குறுந்தூர சேவைகளை இரு தரப்பும் தற்போதுள்ள பஸ் நிலையத்தில் இருந்தும், நெடுந்தூர சேவைகளை புதிய பஸ் நிலையத்தில் இருந்துஅஇரு தரப்பும் முன்னெடுப்பதன் ஊடாக நகரத்தின் நெரிசல் குறைவடையும் என்று ஆளுநர் கருத்து வெளியிட்டார்.

யாழ். பிரதேச செயலர் சா.சுதர்சனும் இதே கருத்தை வலியுறுத்தினார்.

இலங்கை போக்குவரத்துச் சபையின் பிரதான பிராந்திய முகாமையாளர் கே.கேதீசன், "பஸ் நிலையத்தைச் சுற்றி

**(04ஆம் பக்கம் பார்க்க)**









# யாழ். புதிய பஸ் நிலையத்தின் இயங்கு நிலை குறித்து மாவட்ட செயலகத்தில் நேற்று முக்கிய கலந்துரையாடல்

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமைக்கப்பட்ட 63 கடைகளில் இருந்தும் நாளொன்றுக்கு தலா 500 ரூபா வீதம் இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவரின் அனுமதியுடன் அறவிடப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டார். தூய்மை இலங்கை செயற்றிட்டத்தின் கீழ் இந்த பஸ் நிலையத்தை புனரமைக்கும்போது அந்தக் கடைகள் அகற்றப்படும் என்று பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. புதிய பஸ் நிலையத்துக்குச் செல்வது தொடர்பில் தொழிற்சங்களை அழைத்துக் கலந்துரையாட வேண்டும்." – என்றார்.

இதன் பின்னர் கலந்துரையாடலில் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன. நகர அபிவிருத்தி அதிகார சபை தமது முன்மொழிவுகளையும் தெரியப்படுத்தினர்.

புதிய பஸ் நிலையத்தை இயங்கச் செய்வது தொடர்பில் முதலில் கள ஆய்வை மேற்கொள்வது என நேற்றைய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், நகர அபிவிருத்தி அதிகார சபையினர், வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினர், வர்த்தக சங்கத்தினர், தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தினர் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.





# ஏழு மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

தற்போது நிலவும் பலத்த மழையால் கண்டி, கேகாலை மாவட்டங்களுக்கு இரண்டாம் நிலை மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளது.

அத்துடன், பதுளை, மாத்தளை, மொனராகலை, நுவரெலியா, இரத்தினபுரி மாவட்டங்களுக்கு முதலாம் நிலை மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. இந்த மாவட்டங்களில் வசிக்கும் மக்கள் மிகவும் அவதானத்துடன் இருக்கு மாறு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அறிவுறுத்தியுள்ளது.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"நீங்கள் உங்கள் பத்தியில் குறிப் பிட்டபடி அந்த அலுவலகத்துக்கு இரண்டு பேர் நியமிக்கப்படவில்லை. இந்த அலுவலகத்தை இயக்கும் உறுப்பி னர்களின் மொத்த எண்ணிக்கை ஐந்து. அதில் ஒருவர் அதன் தவிசாளர். அவர் களின் பதவிக் காலம் மூன்று வருடங் கள். இதுவரை இருந்த ஐவரில் ஒருவ ரின் பதவிக்காலம் இன்னமும் முடிவ டையவில்லை. மற்றைய நால்வரின் பதவிக்காலமும் முடிவடைந்து விட்ட தால் மொத்தம் நான்கு பேர் அந்த அலுவலகத்திற்கு நீங்கள் குறிப்பிட்ட நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டு இருக்கிறார்கள் என்றே நான் அறிகிறேன். ஏற்கனவே பதவிக் காலம் முடியாமல் இருப்பவர் ஓய்வு பெற்ற இராணுவ மேஜர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ. இப்போது நீங் கள் குறிப்பிட்ட அந்த நேர்முகப் பரீட்சை மூலம் எங்களுடைய நாடாளு மன்ற உறுப்பினர் சிறிதரனும் சேர்ந்து தெரிவு செய்த நான்கு உறுப்பினர்களில் இருவர் நீங்கள் குறிப்பிட்டபடி படைத் தரப்பு பின்னணியைச் சேர்ந்தவர்கள். இவர்களின் தெரிவு இப்பதவிக்கு இன் னும் உறுதிப்படுத்தப்படவில்லை. அரச மைப்புக் கவுன்ஸிலைப் பொறுத்தவரை சம்பந்தப்பட்டோரைத் தெரிவு செய்து பரிந்துரைக்கும் பணி மாத்திரமே அதற் குரியது. அதனை இப்போது அரசமைப் புக் கவுன்ஸில் செய்துள்ளது. இவர் களை ஜனாதிபதி நியமனம் செய்தால் அவர்கள் அந்தப் பதவியில் உறுதிப் படுத்தப்படுவார்கள். அப்படி இப்போது நீங்கள் குறிப்பிட்ட இருவர் உட்பட நால்வரின் பெயர்களையும் ஜனாதிபதி அங்கீகரித்து நியமனம் வழங்கினால் நிலைமை என்னவாகும் என்று யோசி யுங்கள்.

"யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்க ளுக்கு நஷ்ட ஈடு மற்றும் பாதிப்புக ளுக்கான நிவாரணம் ஆகியவற்றை வழங்கவே இந்த இழப்பீட்டு அலுவ லகம். அதனை இயக்கும் ஐந்து இயக்கு நர்களில் ஏற்கனவே இருக்கும் ஒரு வரும் இப்போது புதிதாக தெரிவு செய் யப்பட்ட நால்வரில் இருவரும் நேரடி யாக படைத் தரப்போடு சம்பந்தப் பட்டவர்கள். ஒருவர் இராணுவ மேஜர் ஜெனரல். மற்றவர் கடற்படையின் ரியர் அட்மிரல். மூன்றாவது பெண்மணி பாதுகாப்பு படையினர் ஆக்கிரமித்த காணிகளை மக்களிடம் வழங்காமல் இருப்பதற்கான நிர்வாகப் பணிகளை முன்னெடுத்த பாதுகாப்பு அமைச்சின் பிரதிச் செயலாளர். ஆக, பாதுகாப்பு படையினரின் நடவடிக்கையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அதற்கான இழப்பீடுகளை தீர்மானித்து வழங்கும் பொறுப்பு அதே பாதுகாப்புப் படைத் தரப்பைப் பெரும்பான்மையாகக் கொண்ட (ஐவரில் மூவர்) குழுவிடம் தான் ஒப்படைக்கப்படுகின்றது.

"அதனை வெளிப்படுத்தி அம்பலப் படுத்தி, ஆட்சேபித்து, சர்ச்சையை உருவாக்க வேண்டிய தமிழரசுக் கட்சி அதற்குத் துணை போய், அந்த விட யத்தை அமுக்கி வாசிக்கின்றது. தயவு செய்து இதனை அம்பலப்படுத்துங்கள்."

- இப்படிக் கூறினார் அந்த மூத்த பிரஜை. அரசு விடயங்களுடன் நெருக் கம் உள்ள அவரின் கருத்தை அப்படியே தந்திருக்கிறேன். அதில் ஏதோ விடயம் இருப்பதாகவே படுகிறது.

இது விடயத்தில் தமிழரசுக் கட்சி யின் தலைமை ஏதேனும் சொல்ல விரும்பினால் அதை வெளிப்படுத்துவது நல்லது என்று நினைக்கிறேன். குறைந் தபட்சம் அந்த மூத்த பிரஜைக்காவது ஒரு பதிலைத் தமிழரசு வெளிப்படுத் துவது நல்லது.

⋆⋆⋆

'லேக் ஹவுஸ்' என்று பொதுவாக அழைக்கப்படும் அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமி டெட் (ஏ.என்.சி.எல்.) நிறுவனம் அரசாங் கக் கட்டுப்பாட்டில் இயங்குவது. அதற் குப் பேரிடி தரும் தீர்ப்பு ஒன்றை உயர் நீதிமன்றம் நேற்று வழங்கியிருக்கின் றது. முன்னாள் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவுக்கு ஏற்படுத்திய அவதூறுக் காக ரூ. 500 மில்லியன் (ஐம்பது கோடி ரூபா) இழப்பீடு வழங்க வேண்டும் என்று கொழும்பு மாவட்ட நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை உச்ச நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.

இந்த வழக்கு நவம்பர் 2007 இல் 'லேக் ஹவுஸ்' நிறுவனத்தின் சிங்களப் பத்திரிகையான 'சிலுமின'வில் வெளி யான ஒரு செய்திக் கட்டுரையை ஒட் டித் தாக்கல் செய்யப்பட்டது.

அதில் அப்போது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியைப் பிரதிநிதித் துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பி னராக இருந்த விஜயதாஸ ராஜபக்ஷ வுக்கு எதிராக இரண்டு முழு பக்க அவதூறு விடயங்கள் வெளியிடப்பட்டி ருந்தன எனக் கூறப்படுகின்றது. அர சாங்கத்திலிருந்து எதிர்க்கட்சிக்கு மாறுவதற்கான அவரது முடிவைத் தொடர்ந்து இந்தக் கட்டுரை வெளியிடப் பட்டது.

2009 ஆம் ஆண்டில், விஜயதாஸ ராஜபக்ஷ கொழும்பு மாவட்ட நீதிமன் றத்தில் லேக் ஹவுஸ் மற்றும் அப்போ தைய பத்திரிகை ஆசிரியர் கருணா தாஸ சூரியாராச்சிக்கு எதிராக ரூ. 500 மில்லியன் இழப்பீடு கோரி அவதூறு வழக்கு தொடர்ந்தார். நீதிமன்றம் 2010 இல் அவருக்கு ஆதரவாகத் தீர்ப்பளித்து. முழுத் தொகையையும் வழங்க உத்தர விட்டது.

இந்தத் தீர்ப்புக்கு எதிராக சிவில் மேன்முறையீட்டு உயர் நீதிமன்றத்தில் லேக் ஹவுஸ் தொடர்ந்த மேன் முறையீடு 2013 இல் தள்ளுபடி செய்யப் பட்டது.

உயர் நீதிமன்றத்தில் அது தாக்கல் செய்த இறுதி மேன்முறையீடு நேற்றுத் தள்ளுபடி செய்யப்பட்டு, கீழ் நீதிமன்றத் தின் தீர்ப்பை உயர்நீதிமன்றம் உறுதி செய்தது.

நீதியரசர்கள் ஜனக் டி சில்வா, அச் சலா வெங்கப்புலி, சோபிதா ராஜ கருணா ஆகியோர் கொண்ட ஆயம் இத்தீர்ப்பை வழங்கியது.

ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாச ராஜபக்ஷவுக்கு ஒரு சுவீப்தான்....!

⋆⋆⋆

## குருந்தூர்மலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறான சூழலில் விவசாய நிலங் களை ஆக்கிரமித்து நேற்று தொல்லியல் திணைக்களம் ஆக்கிரமித்திருக்கின்றது.

ரணில் அரசு ஆட்சியில் இருந்தபோது இரவோடு இரவாக தண்ணிமுறிப்பு கிராமம் வரையில் 341 ஏக்கர் தொல்லியல் நிலம் என எல்லைக்கற்களை நாட்டியி ருந்தார்கள். இந்த விடயம் உடனடியாக ரணில் விக்கிரமசிங்க வரை கொண்டு செல்லப்பட்டதனால் ரணில் தலையீடு செய்த காரணத்தால் விவசாய நடவடிக் கைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்தப் படவில்லை.

தற்போது அநுர அரசு ஆட்சியில் குருந்தூர்மலை மற்றும் அதனைச் சூழவுள்ள 341 ஏக்கர் விவசாய நிலப் பரப்புக்கும் பாதுகாப்பு வேலி ஒன்றை அமைத்து முழுமையாக ஆக்கிரமிக்க முயற்சிக்கப்படுகின்றது.

# கோப்பாய் பொலிஸ் நிலையக் காணி இன்று உரிமையாளர்களிடம் கையளிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். கோப்பாய் பொலிஸ் நிலையம் அமைந்துள்ள காணியை அதன் உரிமையாளர்களிடம் கையளிக்குமாறு நீதிமன்றம் கட்டளையிட்டுள்ள நிலையில், இன்று புதன்கிழமை நீதிமன்றத்தின் மூலம் அந்தக் காணி உரிமையாளர்களிடம் கையளிக்கப்படவுள்ளது.




கோப்பாய், இராச வீதியில் அமைந்துள்ள கோப்பாய் பொலிஸ் நிலையக் காணி பல வருடங்களாகப் பொலிஸாரின் கட்டுப்பாட்டிலும், பயன்பாட்டிலும் உள்ளது.

அந்தக் காணியின் உரிமையாளர்கள், காணியைத் தம்மிடம் கையளிக்குமாறு பல்வேறு தரப்பினரிடம் கோரிக்கை விடுத்து வந்தனர். எனினும், அதற்குப் பலன் கிட்டவில்லை.

இந்தநிலையில், 2019 ஆம் ஆண்டு, காணிகளுக்குச் சொந்தமான 9 உரிமையாளர்கள் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

வழக்கு கடந்த 6 ஆண்டுகளாக யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் நடந்த நிலையில், கடந்த ஜூன் மாதம் 27ஆம் திகதி வழக்கின் தீர்ப்பு அறிவிக்கப்பட்டது. அதன்போது பொதுமக்களின் காணியில் இருந்து வெளியேறி, அந்தக் காணியை உரிமையாளர்களிடம் கையளிக்க வேண்டும் என்று மாவட்ட நீதிபதி சி.சதீஸ்கரன் உத்தரவிட்டார்.

எனினும், இரண்டு மாதங்களுக்கு மேலாகியும் இதுவரை பொலிஸார் காணியை உரிமையாளர்களிடம் கையளிக்கவில்லை.

இந்தநிலையில், இன்று புதன்கிழமை நீதிமன்ற உத்தரவை நிறைவேற்ற, நீதிமன்றப் பதிவாளர் கோப்பாய் பொலிஸ் நிலையம் அமைந்துள்ள பகுதிக்குச் சென்று, அங்குள்ள பொலிஸாரை வெளியேற்றி, காணியை உரிமையாளர்களிடம் கையளிக்கவுள்ளார்.

அதேவேளை கோப்பாய் பொலிஸ் நிலையத்தை உரும்பிராய் பகுதிக்கு மாற்றும் நடவடிக்கைகள் நடந்து வருகின்றன. பகுதியளவில் இடமாற்ற நடவடிக்கைகள் முடிந்துள்ளன. எனினும், முழுமையான இடமாற்றம் நடந்து முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழங்குவதாகக் கூறி வயதான பெண்களை டுபாய்க்கு அனுப்பியவர் கைது

வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழங்குவதாகக் கூறி, வயதான பெண்களை சுற்றுலா விசாவில் டுபாய்க்கு அனுப்பிய ஒருவரை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் சிறப்பு புலனாய்வுப் பிரிவு கைது செய்துள்ளது.

கொழும்பு கோட்டை பகுதியில் நடத்தப்படும் வீட்டுப் பணிப்பெண் சேவைகள் என்ற நிறுவனத்தின் மூலமே பெண்கள் பலர் சுற்றுலா வீசாக்களின் மூலம் தொழில்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.



டுபாயில் வீட்டு உதவியாளர் வேலைகளை வழங்குவதாக உறுதியளித்துக் இந்த நபர், 58 முதல் 60 வயதுக்குட்பட்ட பெண்களிடம் பணம் வசூலித்துள்ளார் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்தநிலையில், சுற்றுலா விசாவில் டுபாய்க்கு அனுப்பப்பட்ட பெண் ஒருவர் டுபாயில் தொழிலைப் பெறமுடியாத நிலையில் நாடு திரும்பிய பின்னரே, முகவர் தொடர்பான தகவல் வெளியாகியுள்ளது.

விசாரணையின்போது மேற்படி நபர் பல மில்லியன் ரூபாய்களை மோசடி செய்துள்ளார் என தெரியவந்துள்ளது.

# மட்டக்களப்பு கரடியனாறுப் பகுதியில் யானை தாக்கியதில் விவசாயி மரணம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள ஈரளக்குளம் பகுதியில் உள்ள வயலுக்கு சென்று திரும்பிக் கொண்டிருந்த விவசாயி ஒருவர் யானை தாக்கியதில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற நிலையில் உயிரிழந்த சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை பகல் இடம்பெற்றுள்ளதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

ஈரளக்குளம் கருங்கன்மடு பிரதேசத்தைச் சேர்ந்த 65 வயதுடைய வைரமுத்து நல்லரெத்தினம் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த விவசாயி நேற்று முற்பகல் 11.00 மணிக்கு வயலில் இருந்து வெளியேறி வீட்டுக்கு சென்று கொண்டிருந்த போது வழியில் யானை தாக்கியுள்ளது. அவர் படுகாயமடைந்த நிலையில் சந்திவெளி பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படும் போது வழியில் உயிரிழந்துள்ளார். சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## வருமுன் காத்தல்!

நாட்டின் நிறைவேற்றதிகாரம் நாட்டினுடைய அரசமைப்பின் படி ஜனாதிபதியிடம்தான் உள்ளது. அவர்தான் நிறைவேற்றதிகாரத்தின் தலைமையதிபதி. நாட்டு மக்களும் தங்களது வாக்களிப்பு என்ற இறைமை மூலம் அந்த அதிகாரத்தை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவிடம்தான் ஒப்படைத்து இருக்கின்றனர்.

ஆனால், நாட்டில் முன்னபோதும் இல்லாத ஒரு விவகாரமாக - வழமைக்கு மாறாக - நிறைவேற்றதிகாரத்துக்கு மேலதிக இன்னொரு அதிகார மையம், சமாந்தரமாக நிலைகொண்டிருப்பதாகவே தோன்றுகின்றது.

இராஜதந்திரப் பிரமுகர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், நிறைவேற்றதிகார ஜனாதிபதியையும் அவரது அரசுத் தரப்பினர்களையும் சந்திப்பது போல, அரசில் எந்தப் பதவியையுமே வகிக்காத - குறைந்தபட்சம் நாடாளுமன்ற உறுப்பினராக கூட இருக்காத - ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வாவைச் சந்தித்துப் பேசி வருகின்றனர்.

இந்தியத் தூதர் சந்தோஷ் ஜாவும், பிரான்ஸ் தூதுவர் ரெலி ல்ம்பேர்ட் போன்றவர்கள் பத்திரமுல்லையில் உள்ள பெலவத்தையிக் ஜே.வி.பி. தலைமையகத்துக்குச் சென்று கட்சியின் செயலாளர் ரில்வின் சில்வாவை நேற்று முன்தினம் சந்தித்து விரிவாக உரையாடி இருக்கின்றனர்.

ரின்வில் சில்வா குறைந்தபட்சம் ஆளும் கூட்டணியின் செயலாளர் கூட அல்லர். ஆளும் கூட்டணியின் பங்காளித் தரப்பாரான ஒரு கட்சியின் செயலாளர் மட்டுமே.

ஆயினும், நிறைவேற்றதிகாரத்தினதும் அரசாங்கத்தினதும் அரூபக்கரங்கள் கொழும்பு பெலவத்தையில் - ஜே.வி.பி. தலைமையகத்தில் - இருந்து தான் இயங்குகின்றன என்பதை புரிந்து கொண்டு தூதுவர்கள் ஒரு புறம் ஜனாதிபதி மாளிகையிலும், மறுபுறம் பெலவத்தையும் சலாம் வைக்கும் தங்கள் பணியைத் தந்திரமாகத் தொடர்கின்றனர்.

ஆனால், இது ஆளும் தரப்பின் தலைமைக்கு - நிறைவேற்றதிகார ஜனாதிபதிக்கு - நெருக்கடியான விடயமே.

நாட்டில் நெருக்கடிகள், சிக்கல்கள் வரும்போது நாட்டுத் தலைவரைக் கைவிட்டு, ஆளும் கட்சி எம்.பிக்களே 'செத்த நாயிலிருந்து ஒட்டுண்ணி கழறுவது போல' கழன்று விடுவார்கள் என்ற அனுபவப்பாடம், இதே போன்ற வலிமையோடு ஆட்சிக்கு வந்த கோட்டாபய ராஜபக்ஷவின் அனுபவத்தில் தாராளமாக உண்டு. அவரது ஆட்சிக் காலத்தின் ஆரம்பத்தில் அவர் அதிகார லகானை சரியாகப் பிடிக்க தவறியமையால் நெருக்கடி வந்த சமயம் ஆளுந்தரப்பினரே அவரைக் கைவிட்டு நழுவி விட்டனர்.

கோட்டாவின் நிலைமைக்கு மேலதிகமாக இப்போது நிறைவேற்றதிகாரத்துக்குச் சமாந்தரமாக - வெளியில் தோற்றாமல் - ஓர் அதிகார மையம் ஆளும் கூட்டமைப்புக்கு உள்ளேயே இயங்கி வருவது ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்காவின் செயற்பாட்டுக்கு எந்த நேரத்திலும் இடைஞ்சல் தரக்கூடியது. அதை அவர் புரிந்து கொண்டு நேரத்துடனே பாதுகாப்பு அரண்களை - அரசியல்ரீதியாக - அமைத்துக் கொள்வது வருமுன் காக்கும் தந்திரமாக இருக்கும்.

# பொன்சேகாவின் கடும் சொற்போர்: பதிலளிக்க மொட்டுக் கட்சி மறுப்பு!




"முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவிக்கும் கருத்துகளுக்குப் பதிலளிக்க வேண்டியதில்லை. அவர் யாரென்பது மக்களுக்குத் தெரியும்."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

ராஜபக்ஷக்களுக்கு எதிராக சரத் பொன்சேகா தற்போது கடும் சொற்போர் தொடுத்து வருகின்றார். இறுதிப்போரில் நடந்த சம்பவங்களையும் வெளிப்படுத்தி வருகின்றார். வெள்ளைக் கொடி விவகாரம் பற்றியும் அவர் கருத்து வெளியிட்டுள்ளார். இந்த விவகாரம் தெற்கு அரசியலில் பெரும் அரசியல் சூறாவளியை ஏற்படுத் தியுள்ளது.

இந்நிலையில் சரத் பொன்சேகாவின் அறிவிப்புகள் பற்றி எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மொட்டுக் கட்சியின் பொதுச்செயலாளர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

# யாழில் பல்வேறு குற்றச்செயல்கள்: 14 சந்தேகநபர்கள் சிக்கினார்கள்!

யாழ்ப்பாணத்தில் கடந்த மூன்று தினங்களாக மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்புகளில் 14 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ண தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"யாழ்ப்பாணம் பொலிஸார் கடந்த மூன்று நாள்களாக சில இடங்களில் திடீர் சுற்றிவளைப்புகளை மேற்கொண்டனர். இதன்போது, ஐஸ் போதைப்பொருள், கஞ்சா, கசிப்பு மற்றும் சட்டவிரோத மணல் அகழ்வு உள்ளிட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 14 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களில் இருவர் மேல் நீதிமன்ற வழக்குகளுடன் தொடர்புடையவர்கள்." – என்றார்.





# துறைமுகங்கள், விமான சேவை அமைச்சின் பதில் செயலாளராக வேதநாயகம் ஜெகதீசன்

(நூருல் ஹுதா உமர்)

இலங்கை நிர்வாக சேவை சிரேஷ்டதர அதிகாரியான வேதநாயகம் ஜெகதீசன் துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சின் பதில் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனத்தை ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி என்.எஸ்.குமநாயக நேற்று முதல் அமுலாகும் வகையில் அதிகாரபூர்வமாக வழங்கியுள்ளார். வி. ஜெகதீசன், இதற்கு முன்பு அதே அமைச்சின் மேலதிக செயலாளராகப் பணியாற்றி வந்த நிலையில், நேற்று தமது புதிய



பதவியை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக்கொண்டார்.

அரசு நிர்வாகத்தில் சிறப்பான சேவையைப் புரிந்துள்ள வி.ஜெகதீசன், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகவும், பதில் அரசாங்க அதிபராகவும், பதில் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளராகவும் திறன்பட கடமையாற்றியுள்ளார். அவரின் நியமனம், துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் துறையின் நிர்வாக மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு புதிய ஊக்கத்தை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.






## ‘முரசு’ அனுசரணையில் யாழில் நடக்கும் JFPL தொடரில்

# நேற்று நடந்த இரு காலிறுதியாட்டங்களில் சென். அன்ரனிஸ், பாடுமீன் அணிகள் வெற்றி

‘முரசு’ அனுசரணையுடன் (A One Media) யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வரும் ‘யாழ். உதைபந்தாட்ட பிரிமியர் லீக் (JAFFNA FOOTBALL PREMIER LEAGUE) - 2025’ தொடரின் இரு காலிறுதி யாட்டங்கள் நேற்று (14) நடைபெற்றன.

இதன் முதலாவது ஆட்டத்தில் மணற்காடு சென். அன்ரனிஸ், நாவாந்துறை சென். நீக்லஸ் அணிகள் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் சென். அன்ரனிஸ் அணி ஒரு கோலைப் போட்டது. இதன்படி அந்த அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றியைத் தனதாக்கி அரையிறுதிக்கு முன்னேறியது.

மற்றொரு காலிறுதியாட்டத்தில் குருநகர் பாடுமீன் அணியை எதிர்த்து இமையாணன் மத்தி அணி மோதியது.

இதில் பாடுமீன் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறியது.

அரையிறுதியாட்டங்கள் வரும் 17ஆம் திகதி துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன.





HONOR | NIPPON CEMENT | SINGER | LOLC பினான்ஸ் | கிருபா லேணர்ஸ்
CLEAR MEN | சக்தி TV | tamil one TV | MURASU digital | வீரகேசரி | வணக்கம் | a one | SRI LANKA FOOTBALL | THAADI




# பொய் கூறி நாடாளுமன்றத்தையே ஏமாற்றியிருக்கின்றார் சபாநாயகர்!

## இப்படிக் குற்றம் சுமத்துகின்றார் உதய கம்மன்பில

நாட்டின் மூன்றாவது பிரஜையும் நாடாளுமன்றத்தின் பிரதானியுமான சபாநாயகர் பொய் கூறி நாடாளுமன்றத்தையே ஏமாற்றியிருக்கிறார். பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள முடியாது என சட்டமா அதிபர் திணைக்களமும், நாடாளுமன்ற செயலாளர் சபையும் பரிந்துரைத்தன என சபாநாயகர் கூறியமை முற்றிலும் பொய்யாகும் என பிவிதுரு ஹெல உருமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் அங்கு மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

நாட்டின் மூன்றாவது பிரஜையும் நாடாளுமன்றத்தின் பிரதானியுமான சபாநாயகர் பொய் கூறி நாடாளுமன்றத்தையே ஏமாற்றியிருக்கின்றார். நாடாளுமன்றத்தின் கௌரவத்தைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பிலுள்ள சபாநாயகரே இவ்வாறு நாடாளுமன்ற கௌரவத்தை சீரழிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றார். நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்று தொடர்பிலேயே அவர் மீது இந்தக் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றோம்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்த விசாரணை தொடர்பில் எதிர்க்கட்சியினரால் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அருண ஜயசேகர தொடர்பில் நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்று சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் அந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதம் இன்றி நிராகரிப்பதற்கு சபாநாயகர் தீர்மானித்தார். பிரதி அமைச்சரொருவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டமை இதுவே முதல் சந்தர்ப்பம் என்பதோடு மாத்திரமின்றி, நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்று விவாதம் இன்றி நிராகரிக்கப்பட்டமையும் இதுவே முதலாவது சந்தர்ப்பமாகும்.

பிரதி அமைச்சரொருவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை சமர்ப்பிப்பதற்கு சட்டத்தில் இடமில்லை என சபாநாயகர் கூறினார். சம்பிரதாயம் இல்லை என்ற போதிலும், முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் அமிர்தலிங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட்டு, நாடாளுமன்றத்தில் எந்தவொரு உறுப்பினருக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைக்க முடியும் என்று கூறப்பட்டது. அதற்கமைய தனது கருத்துத் தவறு என்பதை உணர்ந்து கொண்ட சபாநாயகர் அது தொடர்பில் மற்றுமொரு விடயத்தைக் கூறினார்.

பிரதி அமைச்சர்களுக்கு பொறுப்புக்கள் பொறுப்பாக்கப்படவில்லை என்பதால் அவருக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைக்க முடியாது என பின்னர் கூறினார். எனினும் ஜனாதிபதி நாட்டிலில்லாத போது பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதில் பாதுகாப்பு அமைச்சராக கடமைகளைப் பொறுப்பேற்பதால் சபாநாயகரின் அந்தத் தர்க்கத்தையும் எதிர்க்கட்சிகள் ஏற்க மறுத்தன. சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனை மற்றும் நாடாளுமன்ற செயலாளர் சபையின் பரிந்துரைக்கமையவே தான் இந்தத் தீர்மானத்தை எடுத்தார் எனவும் சபாநாயகர் குறிப்பிட்டிருந்தார்.

அந்த அறிக்கை எதிர்க்கட்சியினரின் நீண்ட அழுத்தங்களால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய அதில், 'உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து விசாரணைகள் இடம்பெறுவதால் அது குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க முடியுமா?' என்றே சபாநாயகரால் சட்டமா அதிபரிடம் கேட்கப்பட்டுள்ளது. அதற்கு சட்டமா அதிபர் 'முடியாது' எனப் பதிலளித்துள்ளார்.

இதனை பிரதி அமைச்சரின் நம்பிக்கையில்லாப் பிரேரணை விவகாரத்தில் பயன்படுத்திக் கொண்டுள்ளனர். நாடாளுமன்ற செயலாளர் சபையால் வழங்கப்பட்ட அறிக்கையிலும் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஏற்றுக் கொள்ள முடியும் என்றே பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆனால் சபாநாயகர் முரணான விடயத்தைக் கூறி நாடாளுமன்றத்தை ஏமாற்றியிருக்கின்றார். அதற்கு அவர் நிச்சயம் பதிலளிக்க வேண்டும். - என்றார்.

# அஸ்வெசும நலன்புரி திட்டத்தின் கீழ் 23,775 பயனாளிகளுக்கு நிதி மானியம்


அஸ்வெசும நலன்புரி திட்டத்தின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள 23,775 பயனாளிகளின் குடும்பங்களுக்கு நிதி மானியம் வழங்குவதற்கான முன்மொழிவுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.


ஒரு குடும்பத்திற்கு ரூ.150,000 வரை வழங்கக்கூடிய இந்த மானியம், வணிக அல்லது வேலைவாய்ப்புத் திட்டங்கள் மூலம் வறிய குடும்பங்களின் வாழ்வாதாரத்திற்கு ஆதரவளிக்கும்.

2025 முதல் 2027 வரையிலான வேலைத்திட்டமானது 143 பிரதேச செயலகப் பிரிவுகளில் 839 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கி யுள்ளது.

மேலும், அஸ்வெசும நலன்புரி உதவித் திட்டத்தின் கீழ் தற்போது சலுகைகளைப் பெற்று வரும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த 1.2 மில்லியன் குடும்பங்களை வலுவூட்டும் பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இதன் முன்னோடித் திட்டங்கள் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி ஆகியவற்றின் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியுடன் செயல்படுத்தப் படுகின்றன.





### அபிவிருத்தி இலக்குகளை நோக்கிய மூலோபாயப் பாதை:

# கிராமப்புறப் பெண்களின் தினம் கொண்டாடப்படுவதன் அவசியம்!

**கிராமப்புறப் பெண்களின் தினம் இன்றாகும்.
அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.**

"ஒரு நாட்டின் முன்னேற்றத்தை அறிய விரும்பினால், அந்த நாட்டின் பெண்கள் எவ்வாறு வாழ்கின்றார்கள் என்பதை பாருங்கள்" என்று மகாத்மா காந்தி கூறிய வரிகள் இன்றும் உயிர்பித்து இருப்பது நம் கிராமப்புற பெண்களின் வாழ்க்கை மற்றும் கலாசார முறைமை தனிலேயாகும்.

சர்வதேச கிராமப்புறப் பெண்கள் தினம் ஒவ்வொரு ஆண்டும் ஒக்ரோபர் 15 அன்று உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படுகிறது. சர்வதேச கிராமப்புறப் பெண்கள் தினம் (International Day of Rural Women) உலக ளாவிய ரீதியில் கொண்டாடப்படுவதன் தன்மை யானது, இது வெறும் ஒரு சம்பிரதாய நிகழ்வாக இல்லாமல், உலகளாவிய அபிவிருத்தி மற்றும் மனித உரிமைப் போராட்டத்தின் ஒரு அத்தியாவசிய அங்கமாகச் செயல் படுகிறது என்பதேயாகும். இந்தக் கொண்டாட்டத்தின் முதன்மையான உலகளாவிய தன்மை, ஐக்கிய நாடுகள் சபையின் (UN) உறுதியான தலைமைத்துவத்தில் இருந்து தொடங்குகிறது. ஐ.நா. பொதுச் சபையின் பிரகடனத்தின் கீழ் நிறுவப்பட்ட இந்த நாள், உலக உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO),ஐ. நா. மகளிர் அமைப்பு (UN Women), மற்றும் சர்வதேச விவசாய மேம்பாட்டு நிதி (IFAD) போன்ற பன்னாட்டு நிறுவனங்களை ஒரு பொதுவான வருடாந்திர கருப்பொருளின் கீழ் ஒன்றிணைக்கிறது.

இந்தக் கருப்பொருள், கிராமப்புறப் பெண்கள் எதிர்கொள்ளும் வறுமை, காலநிலை மாற்றத்தின் தாக்கம் மற்றும் நில உரிமை மறுப்பு போன்ற மிக அவசரமான உலகளாவிய சவால்களை மையப்படுத்தி, அனைத்து கண்டங்களிலும் உள்ள அரசுகள், தன்னார்வ நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் சமூகங்களுக்கு ஒரு சீரான செய்தியைப் பரப்புகிறது.

இந்தத் தினத்தின் உலகளாவிய கொண்டாட்டத் தன்மை பன்முகப்பட்ட செயல்பாட்டுத் தளமாக அமைந்திருப்பதில் வெளிப்படுகிறது. நியூயோர்க், ரோம் அல்லது ஜெனீவாவில் உயர்மட்டக் கொள்கை விவாதங்களும், நிதியுதவி உறுதிமொழிகளும் மேற் கொள்ளப்படும் அதேவேளையில், ஆசியா, ஆபிரிக்கா மற்றும் இலத்தீன் அமெரிக்காவின் கிராமப் புறங்களில் களச் செயல்பாடுகள், விழிப்புணர்வுப் பட்டறைகள், திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் மற்றும் வெற்றிகரமான பெண் விவசாயிகளுக்கு விருதுகள் வழங்குதல் போன்ற நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன.

இதன் மூலம், உலகளாவிய கொள்கை முடிவுகள், மிக அடிப்படை மட்டத்தில் உள்ள உழைக்கும் பெண்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவகிறது. இது, கொள்கை வகுப்பாளர்களையும், நடைமுறைப் படுத்தும் சமூகங்களையும் ஒரே நோக்கத்துக்காக – அதாவது, கிராமப்புறப் பெண்களை வெறும் உதவியைப் பெறுபவர்களாகப் பார்க்காமல், நிலையான மாற்றத்தின் முதன்மையான முகவர்களாக அங்கீகரிப்பதற்காக இணைக்கிறது. சமத்துவமின்மைக்கு எதிராகக் குரல் கொடுப்பதற்கான ஒரு வருடாந்திர உலகளாவிய தளமாகவும், நீடித்த மற்றும் சமமான உலகை உருவாக் குவதற்கு கிராமப்புறப் பெண்களின் அதிகாரமளிப்பு தவிர்க்க முடியாதது என்ற கூட்டு உறுதிப்பாட்டின் வெளிப்பாடாகவும் அமைகிறது.

கிராமப்புறப் பெண்கள் தினம் கொண்டாடப்படுவதன் அடிப்படை வாதம் என்னவென்றால்,உலகளாவிய நிலைத்தன்மை மற்றும் வளர்ச்சிக்கான இலக்குகளை அடைவதற்கு, கிராமப்புறப் பெண்களைத் தனிமைப் படுத்தி விட்டுச் செல்வது சாத்தியமற்றது என்பதேயாகும். அவர்களின் உழைப்பு மற்றும் பங்களிப்பு பல துறைகளில் இருந்தும் புறக்கணிக்கப்படுகிறது.

உலகளாவிய நிலைத்த அபிவிருத்தி இலக்குகளை (Sustainable Development Goals - SDGs) எட்டுவ தற்கான தேடலில், கிராமப்புறப் பெண்களின் முக்கியத் துவமும், அவர்களின் முழுமையான பங்களிப்பின் அவசியமும் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு காரணியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

உலகின் கிராமப்புறச் சமூகங்களில், குறிப்பாக விவசாயம் மற்றும் இயற்கை வள மேலாண்மையில், பெண்களின் உழைப்பு அடிப்படைத் தளத்தை அமைக்கிறது. அவர்களின் இருப்பு வெறும் மக்கள் தொகைப் புள்ளி விவரமாக இல்லாமல், வறுமை ஒழிப்பு, பசி ஒழிப்பு, காலநிலை மாற்ற தணிப்பு மற்றும் சமூக

தொடர்ச்சி▼




# கிராமப்புறப் பெண்களின் தினம் கொண்டாடப்படுவதன் அவசியம்!

தொடர்ச்சி▲

சமத்துவம் ஆகிய உலகளாவிய இலக்குகளை அடைவதற்கான மிகச் சக்திவாய்ந்த வழியாகும்.

எனவே, கிராமப்புறப் பெண்களை வலுவூட்டுவது என்பது வெறும் சமூக நீதியைக் குறிப்பது மட்டுமல்லாமல், நிலையான வளர்ச்சிக்கு அவசியமான பொருளாதார முதலீடாகவும் கருதப்படுகிறது.

கிராமப்புறப் பெண்களின் முக்கியத்துவமும் பல்நோக்கு பங்களிப்பும் எனும் போது கிராமப்புறப் பெண்களின் முக்கியத்துவம் என்பது அவர்கள் ஆற்றும் பலதரப்பட்ட பணிகளில் இருந்து உருவாகிறது. உலகளாவிய உணவுப் பாதுகாப்பில் இவர்களின் பங்களிப்பு அளப்பரியது. வளரும் நாடுகளில் விவசாயப் பொருள்களின் உற்பத்திக்கு இவர்கள் முதன்மைக் காரணமாக உள்ளனர்.

பயிர் சாகுபடி முதல் அறுவடை, உணவு பதப்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்தல் வரை கிராமப்புறச் சங்கிலியின் ஒவ்வொரு கட்டத்திலும் இவர்களின் ஊதிய உழைப்பும், ஊதியமற்ற உழைப்பும் முக்கியப் பங்காற்றுகின்றன. இதைத் தாண்டி, அவர்கள் தங்கள் குடும்பங்கள் மற்றும் சமூகங்களுக்குள் சுகாதாரப் பாதுகாப்பு, குழந்தைப் பராமரிப்பு மற்றும் முதியோர் பராமரிப்பு ஆகியவற்றை உறுதி செய்வதில் ஈடுபடும் ஊதியமற்ற பராமரிப்புப் பொருளாதாரத்தின் பெரும்பகுதியையும் சுமக்கின்றனர்.

மேலும், இயற்கை வளங்களைப் பாதுகாப்பதிலும், காலநிலை மாற்றங்களுக்கு ஏற்ப விவசாய நடைமுறைகளை மாற்றியமைப்பதிலும் அவர்கள் பாரம்பரிய அறிவைக் காக்கும் பொறுப்பாளர்களாகச் செயல்படுகின்றனர். இத்தகைய பல்நோக்கு உழைப்பு, கிராமப்புறப் பொருளாதாரத்தின் அடித்தளத்தை ஸ்திரப்படுத்துகிறது.

அபிவிருத்தி இலக்குகளை எட்டுவதில் இருப்பின் அவசியமானது கிராமப்புறப் பெண்களின் இருப்பும், அவர்களின் முழுத் திறனைப் பயன்படுத்துவதும் அபிவிருத்தி இலக்குகளை எட்டுவதற்கு அத்தியாவசியமானதாகும். குறிப்பாக, இலக்கு 1 (வறுமை ஒழிப்பு) மற்றும் இலக்கு 2 (பசி ஒழிப்பு) ஆகியவற்றின் வெற்றியில் இது நேரடியாகத் தொடர்புபடுகிறது. கிராமப்புறப் பெண்களே உலகில் மிகவும் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்ட பிரிவினரில் உள்ளனர். அவர்களுக்கு நிதி வளங்கள், நிலத்தின் மீதான சட்ட உரிமைகள், மற்றும் நவீன தொழில்நுட்ப அணுகல் ஆகியவற்றை வழங்குவதன் மூலம், அவர்களின் உற்பத்தித் திறனை 20-30 வீதம் வரை அதிகரிக்க முடியும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்த அதிகரித்த உற்பத்தி, குடும்ப வருமானத்தை உயர்த்துவதோடு, தேசிய உணவு உற்பத்தியையும் பெருக்கி, பசியைக் குறைக்கிறது. மேலும், இலக்கு 5 (பாலின சமத்துவம்), இலக்கு 13 (காலநிலை நடவடிக்கை) மற்றும் இலக்கு 17 (கூட்டாண்மை) ஆகியவற்றை எட்டுவதற்கும் அவர்களின் அரசியல் மற்றும் பொருளாதாரப் பங்கேற்பு கட்டாயமாகும். அவர்களின் உள்ளூர் அறிவு காலநிலை அபாயங்களைக் குறைக்கும் உத்திகளை வடிவமைக்க உதவுகிறது.

அபிவிருத்தி இலக்குகளை எட்டுவதற்கான மூலோபாய வழி, கிராமப்புறப் பெண்களின் திறனை முழுமையாகப் பயன்படுத்தி அபிவிருத்தி இலக்குகளை எட்ட, நிறுவன மற்றும் கொள்கை ரீதியான மாற்றங்கள் அவசியமாகின்றன. இதற்கான மூலோபாய வழி முறைகள் பின்வருமாறு அமைகின்றன. சொத்துரிமை மற்றும் சட்டப் பாதுகாப்பு, விவசாய நிலங்கள் மற்றும் பிற உற்பத்திச் சொத்துக்களின் மீதான சமமான உரிமைகளை கிராமப்புறப் பெண்களுக்கு உறுதி செய்வதன் மூலம், அவர்களின் பொருளாதார முதலீட்டுத் திறனை அதிகரிப்பது.நிதி மற்றும் தொழில்நுட்ப அணுகல் விவசாய விரிவாக்கச் சேவைகள்,கடன் வசதிகள்,மற்றும் காலநிலைக்கேற்ற நவீன தொழில்நுட்பங்கள் ஆகியவற்றை அவர்களுக்குக் கிடைக்கச் செய்வதில் உள்ள தடைகளை அகற்றுவது. கல்வி மற்றும் சுகாதார முதலீடு கிராமப்புறப் பெண்களுக்கு தரமான கல்வி மற்றும் சுகாதார சேவைகளை வழங்குவதன் மூலம் அவர்களின் மனித மூலதனத்தை மேம்படுத்துவது.தளங்களிலும் கிராமப்புறப் பெண்களின் பங்களிப்பை உறுதிசெய்வதன் மூலம், அவர்களின் தனிப்பட்ட தேவைகளை அபிவிருத்தித் திட்டங்களில் இணைப்பது.

கிராமப்புறப் பெண்களின் முக்கியத்துவமும் அவர்களின் இருப்பின் அவசியமும், அபிவிருத்தி இலக்குகளை எட்டும் வழியில் ஒரு மையச் சமன்பாடாகத் திகழ்கின்றன. அவர்களை வலுவூட்டுவது என்பது தாராள மனப்பான்மையின் செயல் அல்ல மாறாக, நிலையான வளர்ச்சி, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் சமூக சமத்துவம் ஆகியவற்றை அடைவதற்கான ஒரு அத்தியாவசியமான, அறிவு பூர்வமான மற்றும் மூலோபாய முதலீடாகும். இந்த மூலோபாயப் பாதையின் மூலம் மட்டுமே, உலகின் அபிவிருத்தி இலக்குகளை விரைவாகவும், வெற்றிகரமாகவும் அடைவது சாத்தியமாகும்.

கிராமப்புறப் பெண்கள் தற்கால யுகத்தில் அபிவிருத்

தொடர்ச்சி▼

# கிராமப்புறப் பெண்களின் தினம் கொண்டாடப்படுவதன் அவசியம்!

தொடர்ச்சி▲

தியை நோக்கிய சுயமாற்றத்தின் எத்தணிப்பாக உலக ளாவிய அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கும், பொருளாதார ரீதியில் முழுச் சுதந்திரம் பெறுவதற்கும், கிராமப்புறப் பெண்கள் இன்றைய காலகட்டத்தில் தங்கள் அடையாளத்தையும் திறன்களையும் மறு வரையறை செய்ய வேண்டியது இன்றியமையாதது. பாரம்பரியமாக விவசாயம் மற்றும் குடும்பப் பராமரிப்பின் தூண்களாக இருந்த அவர்கள், இப்போது தன்னம்பிக்கை கொண்ட தொழில்முனைவோராகவும், முடிவெடுக்கும் தலைவர்களாகவும் தங்களை மாற்றிக்கொள்ள வேண்டும். இதுவே அபிவிருத்தி சார்ந்து அவர்கள் முன்னேற வேண்டிய அடிப்படைக் கொள்கையாகும். இந்த மாற்றம்,வெறும் உழைப்புச் சுரண்டலில் இருந்து விலகி,தனிநபர் மாற்றம்,சமூகப் பங்கேற்பு மற்றும் தொழில்நுட்ப அறிவு ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு மூலோபாய அணுகுமுறையாக இருக்க வேண்டும்.

நவீன யுகத்தில் கிராமப்புறப் பெண்கள் முன்னேற, தொழில்நுட்ப அறிவை பெறுவது முதன்மையான தேவையாகும். ஸ்மார்ட்ஃபோன் மற்றும் இணைய அணுகலை வெறும் தகவல் தொடர்புக்கு மட்டும் பயன்படுத்தாமல், அதை சந்தைப்படுத்துதல், நிதி மேலாண்மை மற்றும் புதிய திறன் மேம்பாட்டுப் பயிற்சி ஆகியவற்றுக்கான ஒரு கருவியாக அவர்கள் மாற்ற வேண்டும். உதாரணமாக,தங்கள் தயாரிப்புகளை ஈ-காமர்ஸ் தளங்கள் மூலம் நகர வாடிக்கையாளர்களிடம் கொண்டு செல்ல, டிஜிட்டல் மார்க்கெட்டிங் குறித்த அடிப்படை அறிவு அவர்களுக்கு அவசியமாகிறது. இது அவர்களின் பொருளாதாரச் செயல்பாட்டை உள்ளூர் வட்டத்திலிருந்து உலகளாவிய சந்தை வரை விரிவுபடுத்தி,வேலையின்மை என்ற சவாலைத் தொழில்முனைவு என்ற வாய்ப்பாக மாற்ற உதவும். இத்தகைய தொழில்நுட்ப அறிவு, அவர்களைச் சுரண்டலுக்கு உள்ளாக்கும் இடைத்தரகர்களைத் தவிர்த்து,தங்கள் உழைப்புக்கான முழுப் பலனையும் பெற வழிவகுக்கும்.

அபிவிருத்தியை நோக்கி முன்னேற, கிராமப்புறப் பெண்கள் தங்கள் நிதிச் சுதந்திரத்தை உறுதி செய்வது அவசியம். அவர்கள் சம்பாதிக்கும் வருமானத்தின் மீது முழுமையான கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பதோடு மட்டுமல்லாமல், நிலம் மற்றும் சொத்துரிமை பெறுவதிலும் உறுதியாக இருக்க வேண்டும். நிலத்தின் மீதான சட்டபூர்வமான உரிமை, அவர்களுக்கு ஒரு பாதுகாப்பு வளையத்தை வழங்குவதோடு, வங்கி அல்லது நிதி நிறுவனங்களிடமிருந்து கடன்களைப் பெற்று, தங்கள் தொழிலை விரிவாக்குவதற்கான பிணையமாகவும் செயல்படும். இந்தச் சொத்துரிமை, குடும்பத்துக்குள்ளும் சமூகத்திலும் அவர்களின் பேரம் பேசும் சக்தியையும் முடிவெடுக்கும் தகுதியையும் உயர்த்தும். மேலும், உள்ளூர் நிர்வாக அமைப்புகள், கிராம சபை கூட்டங்கள் ஆகியவற்றில் தயக்கமின்றி பங்கேற்பதன் மூலம், தங்கள் கிராமத்தின் அபிவிருத்தித் திட்டங்களைத் தீர்மானிக்கும் அங்கமாக அவர்கள் மாற வேண்டும்.

கிராமப்புறப் பெண்களின் இன்றைய முன்னேற்றம், வெறும் வெளியிலிருந்து வரும் திட்டங்களைச் சார்ந்து இல்லாமல், அவர்களின் தன்னம்பிக்கை, விழிப்புணர்வு மற்றும் சுயமுயற்சியின் அடிப்படையில் அமைய வேண்டும். சமூகத்தில் ஆழமாக வேரூன்றியிருக்கும் பழமைவாதக் கட்டுப்பாடுகளுக்கும்,சவால்களுக்கும் அப்பால் சென்று, தங்கள் தனிப்பட்ட இலக்குகளையும் குடும்ப நலனுக்கான எல்லைகளையும் வகுத்துக் கொள்ளும் துணிச்சலை அவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். இன்றைய நவீன உலகில், கிராமப்புறப் பெண்கள் வெறும் 'வீட்டு விளக்காய்' இல்லாமல், 'நாட்டுக்கே வெளிச்சம்' வீசும் சக்திகளாகத் திகழ வேண்டும் என்பதே நிலைத்த அபிவிருத்திக்கான மிகச் சிறந்த மற்றும் ஒரே வழியாகும்.

**கோபாலகிருஷ்ணன் யாழினிப்ரியா,**
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ் பல்கலைக்கழகம்.





மதிவாணன்
கார்த்திகேசன்,
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
ஊடகக்கற்கைகள்
துறைகலைபீடம்

# இந்திய ஏவுகணை நாயகன் டாக்டர் அப்துல் கலாமின் பிறந்த தினம் இன்று!

"கனவு காணுங்கள் ஆனால் கனவு என்பது நீங்கள் தூக்கத்தில் காண்பது அல்ல உங்களை தூங்க விடாமல் பண்ணுவது எதுவோ அதுவே (இலட்சிய)கனவு" என்ற வாசகத்துக்கு உரிமையாளர் யார் ? என்று அறிந்திருப்பவர்கள் ஒரு சிலரே. அவர் வேறு யாருமல்ல இந்தியாவின் ஏவுகணைகளின் நாயகன் (The Missile Man ) என்று அழைக்கப்படும் டாக்டர் ஏ.பி .ஜே .அப்துல் கலாம் தான்.

இந்தியாவின் 11 ஆவது குடியரசுத் தலைவரான டாக்டர் ஏ. பி. ஜே. அப்துல் கலாமின் பிறந்த தினம் இன்றாகும் . "மக்களின் ஜனாதிபதி" என்று அழைக்கப்பட்ட மனிதனை பற்றி இந்த எழுத்தாவணத்தில் ஆராயலாம்.

டாக்டர் ஆவுல் பக்கிர் ஜைனுலாபுதீன் அப்துல் கலாம் 1931 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 15ஆம் திகதி தமிழ்நாட்டின் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள இராமேஸ்வரத்தில் ஒரு எளிய தமிழ் இஸ்லாமியக் குடும்பத்தில் பிறந்தார். அவரது தந்தை ஜைனுலாப்தீன் ஒரு படகு உரிமையாளராக இருந்தார். அப்துல் கலாமின் தாயாரான ஆஷியம்மாவுக்கு உதவியாக இருந்தார். வறுமையைப் பொருட்படுத்தாமல் எட்டாம் வகுப்புப் படிக்கும்போதே அதிகாலையில் எழுந்து பத்திரிக்கை விநியோகம் செய்த அப்துல் கலாம் ராமேஸ்வரத்தில் தொடக்கப்பள்ளியில் கற்றார்.


பின்னர் உயர்கல்வியை ஸ்வார்ட்ஸ் பள்ளியில் தொடர்ந்ததோடு 1950 இல் இண்டர்மீடியட் படிப்பதற்காக திருச்சி செயிண்ட் ஜோசப் கல்லூரியில் சேர்ந்ததுடன் இயற்பியல் இளங்கலைப்பட்டம் பெற்றார். பின்னர் தனது ஆர்வத்துக்காகச் சென்னை எம்.ஐ.டியில் விண்வெளிப்பொறியியலில் சேர்ந்து பட்டம் பெற்றதுடன் பெங்களூர் ஹிந்துஸ்தான் ஒரோ நாட்டிக்ஸ் லிமிடெட் நிறுவனத்தில் பயிற்சியாளராக சேர்ந்தார். 1960 இல் இந்தியாவின் மத்திய அரசின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைச்சின் வானூர்தி அபிவிருத்தி அமைத்தல் பிரிவில் ( DRDO ) விஞ்ஞானியாக தமது பணியை தொடர்ந்ததுடன் அப்போது அப்துல் கலாமுக்கு 250 ரூபா மாதச் சம்பளமாக வழங்கப்பட்டது. அந்தக் காலப் பகுதியிலேயே இந்திய ராணுவத்துக்காக சிறிய வானூர்தியை வடிவமைத்து கொடுத்தார்.

இந்திய துணைக்கோள் ஏவுகணை குழுவில் SLV செயற்கைகோள் ஏவுதலில் முக்கிய பங்காற்றினார். 1980 ஆம் ஆண்டில் ஏவப்பட்ட SLV- 3 செயற்கைகோள் ஏவுதலில் முக்கிய பங்காற்றியவர்களில் இவரும் ஒருவராவார் . பின்னர் இந்திய விண்வெளி ஆராய்ச்சி (ISRO) நிறுவனத்திலும் 1963 ஆம் முதல் 1983 ஆண்டு வரை இணைந்து பணியாற்றினார்.1963 இல் நாசாவின் லாங்லி ஆராய்ச்சி மையம், வாலோப்ஸ் விமான வசதியைப் பார்வையிட்டதோடு தமது நாட்டிலும் நாசா போன்றதொரு விண்வெளி நிலையம் ஒன்றை உருவாக்க எண்ணினார். இதன் விளைவாக இஸ்ரோவின் ( ISRO ) விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்தை நிறுவ அப்துல் கலாமால் உதவ முடிந்தது.

அதன் பின்னர் சாட்டிலைட் லாஞ்ச் வெஹிகிள் ( S.L V -3 ) என்ற திட்டத்தைத் தொடங்கினார். அப்துல் கலாம் வாழ்விலும் கூட மறக்க முடியாத விடயங்களும் இடம்பெற்றிருக்கின்றன.

1976 ஆம் ஆண்டு தனது தந்தையின் மரணம் இடம்பெறுகின்றது. அப்போதும் கூட தைரியமாக இருந்த கலாம் அந்த துயரத்தையும் தாண்டி 1981

தொடர்ச்சி▼



# இந்திய ஏவுகணை நாயகன் டாக்டர் அப்துல் கலாமின் பிறந்த தினம் இன்று!

தொடர்ச்சி▲

ஆம் ஆண்டு பத்ம பூஷன் விருது பெற்றார். 1980 ஆம் ஆண்டு இந்தியாவின் முதல் செயற்கைக் கோளான ரோகிணி-ஐ வெற்றிகரமாக விண்ணில் ஏவப்படுவதற்குக் காரணமாகவும் இருந்தார் .

அதன் பின் மீண்டும் இந்திய மத்திய அரசின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைச்சின் வானூர்தி அபிவிருத்தி அமைத்தல் பிரிவில் (DRDO ) விஞ்ஞானியாக பணியினைத் தொடர்ந்தார்.ஒருங்கிணைந்த வழிகாட்டப்பட்ட ஏவுகணை மேம்பாட்டுத் திட்டத்தின் (IGMDP) திட்ட இயக்குநராகப் பொறுப்பேற்றார். இத்திட்டத்தின் கீழ், பிரித்வி, திரிஷூல், ஆகாஷ், நாக், அக்னி ஆகிய ஐந்து ஏவுகணைகளை உருவாக்கினார். இதன் சிறப்பம்சங்கள் மிக முக்கியமான ஒன்றாகும். கண்டம் விட்டு கண்டம் தாக்கக் கூடியதாக அக்னி ஏவுகணை வடிவ மைத்ததுடன் பிருத்வி ஏவுகணை விமானப்படையின் உதவியின்றி வேறுபட்ட போர் ஆயுதங்களை கொண்டு செல்லும் விதத்திலும் அப்துல் கலாம் உருவாக்கினார் .

ஆகாஷ் என்ற ஏவுகணை ஒளியை விட வேகமாக செல்லும் விதமாக உருவாக்கினார் . இவரது இந்த அசாத்தியமான பங்களிப்பின் காரணமாக இந்தியாவின் பாரத ரத்னா விருது 1997 ஆண்டு வழங்கப்பட்டது.மேலும் இந்திய இராணுவ ராக்கெட் படையின் பிதாவாகவும் நினைவுகூறப்படுகின்றார் . 'இந்திய ஏவுகணை நாயகன்' என்று உலகளவில் அறியப்படும் அப்துல் கலாம் 1998 ஆம் ஆண்டில் நடந்த பொக்ரான் – II அணு ஆயுத சோதனையில் இவர் முக்கியப் பங்கு வகித்தார். அதன் பின்னர் 2002 ஆம் ஆண்டு இடம்பெற்ற குடியரசு தேர்தலில் வெற்றி பெற்று இந்தியாவின் 11 ஆவது குடியரசுத் தலைவராக ஜீலை 25 திகதி பதவியேற்றதுடன் பாரத ரத்னா விருது பெற்ற மூன்றாவது குடியரசு தலைவர் என்ற பெருமையையும் பெற்றார் .

பதவியில் இருந்தபோது, இலட்சக்கணக்கான இளைஞர்கள் மற்றும் மாணவர்களுடன் உரையாடி, தனது 'இந்தியா 2020' தொலைநோக்குத் திட்டத்தை முன்னெடுத்தார். 2007 ஆண்டில் குடியரசு தலைவர் பதவிக்காலம் நிறைவடைந்த போதும் இந்திய மக்களால் "மக்களின் ஜனாதிபதி" என்று அழைக்கப்பட்டார். இந்திய மண்ணின் மீது அக்கறைக் கொண்ட அப்துல் கலாம் தொழில்நுட்ப ரீதியில் வல்லரசாக இந்தியா திகழ வேண்டும் என்பதே அவரது இலட்சியக் கனவாக இருந்தது.

குடியரசுத் தலைவர் பதவிக்குப் பிறகு, தனது வாழ்வின் இறுதிவரை கற்பித்தல் மற்றும் எழுத்துப்பணியில் ஈடுபட்டார்.2007 ஆம் ஆண்டிலிருந்து 10 வருடங்களில் ஒரு கோடிக்கு அதிகமான மாணவர்களை சந்தித்ததுடன் சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகவும், மைசூர் பல்கலைக்கழகத்தில் வருகை ஆசிரியராகவும் கடமையாற்றினார். இவரின் சேவைக்காக இந்தியாவின் 30 மேற்பட்ட பல்கலைக்கழகங்கள் டாக்டர் பட்டம் வழங்கியதுடன் பெல்ஜியம் ,சிங்கபூர் ,அமெரிக்க ,இங்கிலாந்து போன்ற நாடுகள் 10 மேற்பட்ட விருதுகளை வழங்கியுள்ளன . அவர் எழுதிய 'அக்னிச் சிறகுகள்' (Wings of Fire) என்ற சுயசரிதை நூல், ஒவ்வொரு இளைஞர்களுக்கும்,அவர்களின் வாழ்க்கை பயணத்துக்கும் ஒரு வழிகாட்டியாகத் திகழ்கிறது.

இவ்வாறு தன்னுடைய வாழ்நாள் முழுவதும் இயங்கிய ஏ.பி.ஜே. அப்துல் கலாம் 2015 ஆம் ஆண்டு ஜுலை 27 அன்று, மேகாலயாவில் உள்ள சில்லாங்கில் மாணவர்களுக்கு மத்தியில் உரையாற்றிக் கொண்டிருந்தபோது மாரடைப்பு காரணமாக காலமானார். அவர் காலமானாலும் கூட 'இந்திய ஏவுகணை நாயகன்' என்ற பெயரை சரித்திரத்தில் எவரும் எட்டிவிட முடியாது."உன் பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம் ஆனால் இறப்பு ஒரு சரித்திரமாக இருக்க வேண்டும் " என்ற தனது வாசகத்துக்கு ஏற்ப வாழ்ந்து காட்டிய அறிவுமேதையை மறப்பது எளிதான விடயமல்ல.







# செட்டிகுளம் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்திற்கு வந்த பிரதி அமைச்சரை உட்செல்ல விடாது தடுத்த உறுப்பினர்கள்!

**(கி.வசந்தன்)**

செட்டிகுளம் பிரதேச அபிவிருத்தி குழு கூட்டம் நேற்று செட்டிகுளம் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற போது அங்கு வருகை தந்த அபிவிருத்தி குழுத் தலைவரும், கூட்டுறவு பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்கவை உள்ளே செல்ல விடாது செட்டிகுளம் பிரதேசசபையிர் ஆளும் கட்சி உறுப்பினர்கள் தடுத்து நிறுத்தினர்.

செட்டிகுளம் பிரதேச சபையின் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பிரதேச சபை தலைவர் உட்பட அவர் கட்சி சாராத இருவரை கூட்டத்துக்கு கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலாளரால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

எனினும், வட்டார உறுப்பினர்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் என்ற ரீதியில் அனைத்து சபை உறுப்பினர்களையும் பிரதேச அபிவிருத்தி குழு கூட்டத்தில் அனுமதிக்க வேண்டும் என தெரிவித்து செட்டிகுளம் பிரதேச ஆளுங் கட்சி உறுப்பினர்கள் கறுப்பு உடை அணிந்து பிரதேச செயலக வாயிலில் கூடியிருந்தனர்.

இதன்போது வருகை தந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம், காதர் மஸ்தான், முத்து முகமது ஆகியோரை அனுமதித்த பிரதேச சபை உறுப்பினர்கள் அவர்களோடு பிரதேசசபை வளாகத்தில் நீண்ட நேரம் கலந்துரையாடி இருந்தனர்.

இதன் பின்னர் அங்கு வருகை தந்த அபிவிருத்தி குழு தலைவரும் பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்கவின் வாகனத்தினை பிரதேச செயலகத்திற்குள் நுழைய விடாது சபை உறுப்பினர்கள் தடுத்து நிறுத்தி இருந்தனர்.

இதன் போது தங்களையும் கூட்டத்தில் அனுமதிக்க வேண்டுமென பிரதேச சபை உறுப்பினர்கள் கோரிக்கை வைத்திருந்தனர். இதன் போது கருத்து தெரிவித்த அபிவிருத்தி குழு தலைவர், இது அரசியல் செயற்பாடு அல்ல. நாடாளுமன்றத்தினால் கொண்டு வரப்பட்ட ஒரு நடைமுறை. இந்த விடயம் நாடாளுமன்றத்தின் ஊடாகவே செயல்படுத்தப்பட வேண்டும். ஆகவே இங்கே உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் கதைத்து இதற்கான தீர்வை பெற்றுக் கொள்ள வேண்டும். இல்லையேல் நீதிமன்றத்தை நாட வேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

பிரதேச சபை உறுப்பினர்கள் மீண்டும் இந்த விடயம் தொடர்பில் சுட்டிக்காட்டி தர்க்கத்தில் ஈடுபட்ட நிலையில் கூட்டத்திற்கு அனைத்து பிரதேச சபை உறுப்பினர்களும் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இதன்போது கூட்ட ஆரம்பத்தில் தலைமை உரையாற்றிய பிரதி அமைச்சர் அபிவிருத்தி குழு தலைவர் உபாலி சமரசிங்க, நாடாளுமன்றத்தில் இவ்வாறான ஒரு நடைமுறை கொண்டு வரப்பட்டு சட்டமாக்கப்பட்டு இருந்த போதிலும் கூட எமது பிரதேசத்தின் செயல்பாடு கருதி நாம் இந்த கூட்டத்தில் அனைவரையும் அனுமதித்து சுமூகமான முறையில் கூட்டத்தைக் கொண்டு செல்வோம். இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் ஒரு முடிவு எடுப்போம் எனவும் தெரிவித்து கூட்டத்தை ஆரம்பித்து வைத்திருந்தார்.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற போது நாடாளுமன்ற உறுப்பினர்களான வைத்தியர் ப.சத்தியலிங்கம், காதர் மஸ்தான், முத்து முகமது பிரதேச சபையின் தலைவர் தாஜ்தீன் முகமது இந்தியாஸ் ஆகியோரும் பிரதேச சபை உறுப்பினர்களும் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் மட்டக்களப்பு எல்லையில் கால்நடைகள் மீது துப்பாக்கிச் சூடு

**(பழுவூரான்)**

மட்டக்களப்பு மயிலத்தமடு, மாதவனை பகுதிக்குள் நுழைந்த அத்துமீறிய நிலஆக்கிரமிப்பாளர்களால் மட்டக்களப்பு பண்ணையாளர்களின் கால்நடைகள் மீது நேற்று செவ்வாய்க்கிழமை மீண்டும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

கடந்த 11 ஆம் திகதி முத்துப்பிள்ளை வேந்தன் என்பவரின் பசு மாட்டின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு அந்த மாட்டை இறைச்சிக்காக கொண்டு சென்றுள்ளனர்.

இது குறித்து முறைப்பாடு பதியச் சென்ற பண்ணையாளர்களை பொலிஸாருக்கு ஒன்லைன் வகுப்புகள் நடைபெறுகின்றன எனக் கூறி முறைப்பாட்டை பதிய முடியாது என திருப்பி அனுப்பி உள்ளனர்.

இந்நிலையில் தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரபு உள்ளிட்ட குழுவினர் மயிலத்தமடு, மாதவனை பகுதியில் உள்ள பொலீஸ் பொறுப்பதிகாரியைச் சந்தித்து மேய்ச்சல் தரை நிலங்களில் அத்து மீறி காடழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் நபர்களை கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கூறிய சில நாள்களிலேயே அங்குள்ள பண்ணையாளரின் மாடுகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

# போதைப்பொருள்களைக் கை மாற்றும் இடமாக மாறி வருகின்றதாம் பச்சிலைப்பள்ளிப் பிரதேசம்

## பிரதேச சபை தவிசாளர் சுரேன் விசனத்துடன் குற்றச்சாட்டு

(பூலின்ரன்)



போதைப்பொருள்களைக் கை மாற்றும் இடமாக பச்சிலைப்பள்ளிப் பிரதேசம் மாறி வருவதாக பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் விசனம் தெரிவித்தார்.

அவர்கள் ஊடகங்களுக்கு கருத்து வழங்கையில் –

தற்போது பச்சிலைப்பள்ளிப் பகுதியில் சட்டவிரோத செயற்பாடுகள் அதிகம் இடம்பெற்று வருகின்றன் அவற்றைக் கட்டுபடுத்த முடியாமல் உள்ளது. இதற்கு முழுமையான காரணம் பொலிஸாரே. பச்சிலைப்பள்ளி பகுதியில் இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுடன் பச்சிலைப்பள்ளி பொலிஸார் நல்ல உறவு முறையில் உள்ளனர். – எனத் தனது ஆதங்கத்தை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் அண்மைக் காலங்களில் சட்ட விரோதமான மணல் அகழ்வு அதிகம் இடம் பெற்று வருகின்றது. இப் பிரதேசத்தில் மட்டுமன்றி வடக்கில் பல பிரதேசங்களில் மணல் அகழ்வு நடவடிக்கைகள் மிகவும் மோசமாக நடைபெறுகின்றமையை அவதானிக்க கூடியதாக உள்ளது

இதன் அடிப்படையில் நாட்டில் உள்ள பொலிஸ்மா அதிபருக்கு கடிதம் ஒன்று எழுதி உள்ளேன். அதில் பச்சிலைப்பள்ளி பொலிஸாரின் நடவடிக்கைகள் திருப்பிகரமானவையாக இல்லை என்றும், நாளுக்கு நாள் சட்ட விரோதமான செயற்பாடுகள் அதிகரித்துச் செல்கின்றன எனவும், இதனைக் கட்டுப்படுத்துவதற்கு விசேட ஏற்பாடு ஒன்றைச் செய்யுமாறும் கோரியிருந்தேன். ஆனாலும் பொலிஸ்மா அதிபர் இதற்கான எந்த விதமான நடவடிக்கையும் எடுக்க வில்லை.

பச்சிலைப்பள்ளி பள்ளி பிரதேசத்தில் சட்ட விரோதமான மணல் அகழ்வு செயற்பாடு மட்டுமின்றி, இன்னொரு புறம் இளைஞர்களை போதைக்கு அடிமையாக்கும் செயற்பாடுகளும் இடம் பெறுகின்றன. அந்தப் போதைப்பொருள் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுடன் பளை பொலிஸார் நல்ல உறவு முறையில் உள்ளனர்ழ்

வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் இருந்து வரும் போதைப்பொருள்களை கை மாற்றும் இடமாக பச்சிலைப்பள்ளி பிரதேசம் காணப்படுகின்றது. எதிர் காலத்தில் இதனை கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும். சட்ட விரோதக் கும்பல்களுடன் இருக்கும் தமது உறவு முறையைத் தவிர்து, இத்தகைய சட்ட விரோதமான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கைகளை எடுக்கும் பட்சத்தில் போதையற்ற நாட்டினை கட்டி எழுப்ப முடியும்.

அண்மை காலங்களில் மணல் திருட்டில் ஈடுபடும் நபர்கள் பொலிஸாரின் நடவடிக்கைகலால் மணலை ஏற்றிக் கொண்டு செல்லும் போது வீதி ஓரங்களில் மணல்களை கொட்டி விட்டுச் செல்கின்றனர். இதனால் பெரிய விபத்துக்கள் ஏற்படும் வாய்ப்புகள் உள்ளன. இந்த விடயத்தையும் பொலிஸார் எதிர் காலத்தில் மிகப் பொறுப்போடு முன்னெடுக்க வேண்டும். இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறும் போது பிரதேச சபை மற்றும் பிரதேச செயலகத்திற்கு அறிவித்தால், நாம் மக்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வோம். – எனவும் அவர் மேலும் கூறினார்.

# சம்பா அரிசி.இறக்குமதிக்கு அமைச்சரவையில் அனுமதி



ஜி.ஆர் ஃ11 வகை பொன்னி சம்பா அரிசியை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

உள்நாட்டு சந்தையில் நிலவும் கீரி சம்பா அரிசிக்கான தட்டுப்பாட்டுக்கு தீர்வாக இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கமைய, இன்று முதல் மாதாந்தம் ஒரு இறக்குமதியாளர் அதிகபட்சமாக 520 மெட்ரிக் தொன் வரையிலான ஜி.ஆர்ஃ11 வகை பொன்னி சம்பா அரிசியை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நாட்டின் வருடாந்த அரிசிக்கான நுகர்வு 2.46 மில்லியன் தொன்னாக காணப்படுவதுடன், அவற்றில் கீரி சம்பாவிற்கான நுகர்வு 246,000 மெட்ரிக் தொன் ஆகும்.












# ஐக்கிய மக்கள் சக்தியின் அழுத்தத்தாலேயே மின்சாரக் கட்டண உயர்வு நிறுத்தப்பட்டது!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கூறுகின்றார்




நாட்டில் காணப்படும் வயதில் குறைந்த ஜனநாயக அரசியல் கட்சி ஐக்கிய மக்கள் சக்தி ஆகும். 2020 பெப்ரவரியில் ஸ்தாபிக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தி 30 ஆண்டுகளாக தேர்தல்களுக்கு முகம் கொடுத்த அரசியல் கட்சியாக சிலர் கருதினாலும், ஐக்கிய மக்கள் சக்தி இதுவரை 4 தேர்தல்களை மட்டுமே எதிர்கொண்டுள்ளன. இக்காலப் பிரிவினுள் இந்நாட்டில் எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி பெரும் பணிகளை ஆற்றி வருகின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அரசாங்கமும், மின்சார சபையும் சர்வதேச நாணய நிதியத்தின் அறிவுறுத்தல்கள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க மின்சாரக் கட்டணத்தை 6.8 வீதத்தால் அதிகரிக்க முனைந்த போது, அண்மைய நாள்களாக நானும் ஐக்கிய மக்கள் சக்தியினரும் நாடு முழுவதும் சென்று மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டால் வீதியில் இறங்கிப் போராடுவோம் என்று கூறி வந்தோம். மின்சாரக் கட்டணங்களை அதிகரிக்கும் அரசாங்கத்தின் தீர்மானத்தை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இன்று (நேற்று) காலையிலயே நிராகரித்துள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவித்தார்.

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடன் நேற்று கண்டியில் நடைபெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சியின் வகிபாகம் என்பது ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் இருந்து பேச்சுவார்த்தை நடத்துவதல்ல, மாறாக மக்களுக்கான உண்மையான பொறுப்பை நிறைவேற்றுவதாகும். இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு எடுத்த இந்த முடிவுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசாங்கத்தின் நியாயமற்ற மின்சாரக் கட்டண அதிகரிப்பு, ஐக்கிய மக்கள் சக்தியின் அழுத்தத்தின் காரணமாகவே நிறுத்தப்பட்டது. எதிர்வரும் நாளங்களில் இந்த மின்சாரக் கட்டணத்தை 33 வீதத்தால் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். கடந்த தேர்தல் மேடைகளில் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் கூறியதன் பிரகாரம், ரூ.9000 கட்டணம் ரூ.6000 ஆகவும், ரூ.3000 கட்டணம் ரூ.2000 ஆகவும், 33 வீதத்தால் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு குறைக்காத பட்சத்தில், இந்நாட்டு மக்களுடன் சேர்ந்து வீதிகளில் இறங்கிப் போராடுவோம்.

மின்சாரக் கட்டணங்களை அதிகரிக்குமாறு சர்வதேச நாணய நிதியத்திடமிருந்தே அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகின்றது. தற்போதைய ஆளும் தரப்பினர் எதிர்க்கட்சியில் இருந்த சமயம், முந்தைய அரசாங்கம் இணக்கப்பாடு கண்ட சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தத்தில் திருத்தங்களை மேற்கொள்வதாக தெரிவித்தனர். ஆனால் தெளிவான அதிகாரத்தோடு ஆட்சியில் இருக்கும் இவர்கள் இன்னும் இந்த ஒப்பந்தத்தை மாற்றவில்லை. அவர்கள் கொடுத்த வாக்குறுதிகளை மறந்துவிட்டு, சர்வதேச நாணய நிதியத்தின் அடிமைகளாக மாறி விட்டனர். இந்நாட்டு மக்கள் இப்போது மிகுந்த சிரமங்களுக்கு மத்தியிலயே வாழ்ந்து வருகின்றனர். இன்று நாட்டின் 50 வீதத்துக்கும் அதிகமானோர் ஏழ்மை நிலையை அடைந்துள்ளனர். மின்சாரக் கட்டணங்களை அதிகரித்து, சாதாரண மக்கள் மீது மேலும் அழுத்தத்தை ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. டீல் இல்லாத, மக்களைக் காட்டிக் கொடுக்காத, நடைமுறைக்கு ஏற்ற, மக்கள் நலன் சார்ந்த, எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி, நாட்டு மக்களின் மனித மற்றும் அரசியல் உரிமைகளைப் பாதுகாக்கும். – என்று எதிர்க்கட்சித் தலைவர் அங்கு மேலும் தெரிவித்தார்.













# விசேட தேவையுடையவர்களுக்கான சர்வதேச தினம் இம்முறை யாழில் ஜனாதிபதியின் பங்குபற்றுதலுடன்

## தேசிய விழாவுக்கான முன்னாயத்தக் கலந்துரையாடல் நேற்று முன்தினம்

(பூ.லின்ரன்)

விசேட தேவையுடையோருக்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு டிசம்பர் மாதம் 3ஆம் திகதி ஜனாதிபதியின் பங்குபற்றுதலுடன் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள தேசிய விழா தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் காலை 10.30 மணிக்கு மாவட்டச் செயலக அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

விசேட தேவையுடையோருக்கான தேசிய விழாவானது இம் முறை யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதோடு இந் நிகழ்வில் வட மாகாணத்தின் 5 மாவட்டங்களில் இருந்து விசேட தேவையுடையோர் சுமார் 650 பேரின் பங்குபற்றுதலுடன் யாழ்ப்பாணம் கலாசார மண்டபத்தில் நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக் கலந்துரையாடலில் கிராமிய அபிவிருத்தி சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் மேலதிக செயலாளர் (நிர்வாகம்) ராதா நாணயக்கார, மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் மு.நந்தகோபாலன், அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலக பணிப்பாளர் ஜெயமாலி விக்கிரமராட்சி, மேலதிக அரசாங்க அதிபர் கே.சிவகரன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) பா.ஜெயகரன், பிரதம கணக்காளர் எஸ் கிருபாகரன், திட்டமிடல் பணிப்பாளர் சுரேந்திரநாதன், உதவி மாவட்ட செயலாளர் செல்வி உ. தர்ஷினி, சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி தனுஜா லுக்ஷாந்தன், கிராமிய அபிவிருத்தி சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் உதவி ஆணையாளர், கிறிஸ்தவ மதகுரு, மாவட்ட சமூக சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் தி.உமாசங்கர், அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலக உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# மழை கொட்டும்; வெள்ளம் போடலாம் மக்களுக்கு முற்கூட்டியே எச்சரிக்கை

## வளிமண்டலவியல் திணைக்களம் விடுக்கின்றது

வடகிழக்கு பருவமழையின் தீவிரம் காரணமாக எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை நாட்டில் கடும் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, 250 மில்லி மீற்றருக்கு மேல் மழை பெய்ய வாய்ப்புள்ளதால், பாரிய வெள்ளப்பெருக்குக்கு தயாராக இருக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக வளிமண்டலவியல் திணைக்களத்தினால் எதிர்காலத்தில் வெளியிடப்படும் அறிவிப்புகள் தொடர்பில் பொதுமக்கள் கவனம் செலுத்துமாறு திணைக்களத்தினால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.




# முத்து நகர் விவசாய நிலத்தை அண்டிய காணிகள் தனியார் 7 பேரால் அபகரிப்பு

## காணி ஊழல் மோசடி தொடர்பில் விசாரிக்கக் கோரிக்கை

(ஏ.எச்.ஹஸ்பர்)

திருகோணமலை முத்து நகர் விவசாயிகள் நில அபகரிப்புக்கு எதிராக நேற்று 28 ஆவது நாளாக தொடர் சத்தியாக் கிரகப் போராட்டத்தை திருகோணமலை மாவட்ட செயலகம் முன்பாக முன்னெடுத்து வருகின்றனர்.

விவசாய காணிகள் சூரிய மின்சக்தி உற்பத்திக்கு தனியார் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டதையடுத்தே இந்த சத்தியாக்கிரகப் போராட்டம் முன்னெடுக்கப் படுகின்றது.

விவசாயிகளிடமிருந்து அபகரித்து கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட முத்து நகர் விளை நிலங்களை உடனடியாக திருப்பி கொடு போன்ற பிரதான பதாகையை ஏந்தியவாறு அவர்கள் போராடி வருகின்றனர்.

இது தொடர்பில் போராட்டக்காரர்கள் கருத்து தெரிவிக்கையில் –

எவ்வித சாதகமான பதிலும் எங்களுக்குக் கிடைக்கவில்லை. 352 விவசாயிகளின் 800 ஏக்கர் நிலங்களை அபகரித்துள்ளனர். சுமார் 53 வருடங்களாக விவசாயம் செய்து வந்தோம். இதற்காக எங்களுக்கு மாற்று நிலமாவது தர வேண்டும். மேலும் தனியார் நிலங்களில் 272 ஏக்கரை ஏழு உரிமையாளர்கள் உரிமை கோருகின்றனர். இதில் தனியார் காணி எனக் கூறிப் பொய்யாக உறுதிகளை வழங்கித் தாரை வார்த்துள்ளனர்.இதுதொடர்பில்காணிதிணைக்களம், அரசாங்கம் ஆகிய தரப்புகள் ஊழல், மோசடி தொடர்பில் கவனம் எடுக்க வேண்டும். இது தொடர்பில் அண்மையில் எங்கள் விவசாயிகள் ஒன்பது பேரைக் கைது செய்துள்ளனர். அவர்களின் மோட்டார் சைக்கிள் மற்றும் உழவு இயந்திரம் என்பன இன்னும் மீள வழங்கப்படவில்லை. எனவே அரசாங்கத்தின் மேலான கவனத்துக்கு இதனை நாம் கொண்டு வருகிறோம்.

இந்த விவசாய நிலத்தை அண்மித்த காணிகளில் ஏழு தனியார் நபர்கள் உரிமை கோருகின்றனர். இவர்களின் காணி உரிமங்களை பரிசீலனை செய்ய வேண்டும். இதில் ஊழல், மோசடி இடம் பெற்றுள்ளது. – எனவும் தெரிவித்தார்கள்.

















# மன்னாரில் கழிவு அகற்றல் ஸ்தம்பிதம் கழிவுகளுடன் வாகனம் செயலகம் முன்

## நிரந்தர இடம் ஒதுக்கும் வரை இழுபறி தொடரும் நிலைமை

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் நகர சபை பிரிவில் அகழ்வு செய்யப்படுகின்ற கழிவுகளை கொட்டுவதற்கு நிரந்தர இடம் ஒதுக்கி தரும் வரை மாவட்டச் செயலகத்திற்கு முன் கழிவுகளுடன் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனங்கள் ஒரு போதும் அகற்றப்பட மாட்டாது என மன்னார் நகர சபை முதல்வர் டானியல் வசந்தன் தெரிவித்தார்.

நேற்று செவ்வாய்க்கிழமை மதியம் மன்னார் நகர சபையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

மன்னார் நகர சபை பிரிவில் அகழப்படுகின்ற கழிவுகளை அகற்றி, சேகரிப்பதற்கான ஒரு இடம் இது வரை எமக்கு கிடைக்கவில்லை. இறுதியாக இடம் பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் இரண்டு வாரத்தில் இடம் ஒதுக்கி வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இரு மாதங்களாகியும் இடம் ஒதுக்கி தரப்படவில்லை. இந்தப் பிரச்சினைக்கு எவ்வித தீர்வும் கிடைக்கவில்லை. சின்னக்கடை வட்டாரத்தில் ஓர் இடத்திலேயே அகழப்படுகின்ற குப்பைகளை கொட்டி வந்தோம்.

அவ்விடத்தில் பாரிய தொற்று நோய் பரவும் நிலை ஏற்பட்டுள்ளது, அப்பகுதியில் வசிக்கும் மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

மக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ள நிலையில் அவ்விடத்தில் குப்பை கொட்டுவது உடனடியாக நிறுத்தப் பட்டுள்ளது.

மன்னார் நகர சபை பிரிவில் அகழ்வு செய்யப்படுகின்ற குப்பைகளை கொட்ட ஓர் இடம் ஒதுக்கித் தருமாறு, மாவட்ட செயலாளர், வன ஜீவராசிகள் திணைக்களம், வனப் பாதுகாப்பு திணைக்களம் ஆகிய திணைக்களங்களிடம் கோரிக்கை விடுத்திருந்தேன்.

மக்களின் தேவைகளுக்காக இடம் ஒதுக்கி தர முடியாத நிலையில் பறவைகளுக்கும், மிருகங்களுக்கும் இடத்தை ஒதுக்குகிறார்கள். ஆனால் மன்னார் மக்களின்தேவைக்காக இடம்ஒதுக்க மறுக்கின்றார்கள். குப்பை அகழ்வு செய்தாலும், கொட்டுவதற்கு இடம் இல்லாத நிலை காணப்பட்டுள்ளது.

இதனால் நேற்றைய தினம் திங்கட்கிழமை, 13ஆம் திகதி அகழ்வு செய்யப்பட்ட குப்பைகள் வாகனத்துடன் மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை குப்பை அகழ்வு செய்யப்படவில்லை. நிரந்தர இடம் ஒதுக்கி தரும் வரை மன்னாரில் கழிவு அகற்றல் இடம் பெறாது. இது வரை இடம் ஒதுக்கி தரவில்லை. மன்னார் மக்களின் தேவைகளுக்காக 2 ஏக்கர் நிலப் பரப்பை வழங்க முடியாத வன பாதுகாப்பு திணைக்களம் மன்னார் மக்களுக்கு இனியும் தேவைதானா என சிந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

நாட்டில் 30 வருட யுத்தம் இடம்பெற்று முடிவடைந்து, ஓர் அமைதியான சூழல் இந்த மன்னாரில் ஏற்பட்டுள்ள நிலையில் மீண்டும் ஒரு பிரச்சனை ஏற்படுவதற்கு வன இலாகா மற்றும் பறவைகள் சரணாலயம் போன்றவை காரணமாக அமையப் போகின்றன.

கழிவுகளை கொட்ட நிரந்தர இடம் ஒதுக்கும் வரை மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன்னால் கழிவுகளுடன் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனங்களை எக் காரணம் கொண்டும் அவ்விடத்தில் இருந்து எடுக்க மாட்டோம். – என அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த பிரச்சினை குறித்து மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் –

மன்னார் நகர சபைப் பிரிவில் கழிவகற்றல் பிரச்சினை நீண்ட காலமாக காணப்படுகின்றது. ஏற்கனவே பாப்பாமோட்டை பகுதியில் ஒதுக்கப்பட்ட இடத்தில் மன்னார் நகர சபையினர் தமது பிரிவில் அகழ்வு செய்யப்பட்ட குப்பைகளை கொட்டி வந்தனர்.

அந்தப் பகுதியில் கழிவுகளை கொட்டுவதற்கு எதிராக கொழும்பைத் தளமாக கொண்ட சூழலியல் அமைப்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்ததன் காரணமாக அந்த இடத்தில் தற்போது கழிவுகளை கொட்ட தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனால் தற்போது மன்னார் நகர சபையினர் அண்மைக்காலமாக மன்னார் மையப்பகுதியில் ஓர் இடத்தில் கழிவுகளைக் கொட்டி வந்தார்கள். ஆனால் அந்தப் பகுதிகளில் தொற்று நோய் பரவும் நிலை ஏற்பட்டுள்ளதோடு, சூழல் மாசடையும் நிலையும் உருவாகியுள்ளது.

இதனால் நேற்றைய தினம் திங்கட்கிழமை பொதுமக்கள் எதிர்ப்பை தெரிவித்தனர். இதனால் அந்தக் கழிவுகள் கொட்டும் இடத்தையும் மூட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் குப்பை கொட்ட இடம் இல்லாத காரணத்தால் மன்னார் நகர சபையினர் கழிவுகளை சேகரித்த வாகனங்களை மாவட்ட

தொடர்ச்சி▼






# மன்னாரில் கழிவு அகற்றல் ஸ்தம்பிதம் கழிவுகளுடன் வாகனம் செயலகம் முன்

## நிரந்தர இடம் ஒதுக்கும் வரை இழுபறி தொடரும் நிலைமை

தொடர்ச்சி▲

செயலகத்திற்கு முன்பாக நிறுத்தியுள்ளனர்.

தற்போது சேகரிக்கும் கழிவுகளை எங்கே கொட்டுவது என்ற பிரச்சினை எழுந்துள்ளது. கடந்த ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் கூடுதலான நிலப்பகுதி வன ஜீவராசிகள் திணைக்களம், வன பாதுகாப்பு திணைக்களம் ஆகியவற்றின் கீழ் இருப்பதன் காரணத்தினால் அவர்களுடன் கலந்துரையாடி பொருத்தமான இடத்தை தெரிவு செய்து அடையாளம் கண்டு அவ்விடத்தில் கழிவுகளைக் கொட்ட தீர்மானிக்கப்பட்ட போதும் களப் பரிசோதனையின் போது இணக்கமான நிலை ஏற்படவில்லை.

வன பாதுகாப்பு திணைக்களத்தினால் முன் மொழியப்பட்ட இடத்தை நாங்கள் அடையாளம் காண முற்பட்ட போது குறித்த இடம் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குற்பட்ட இடமாகவும், அந்த இடம் மக்களுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்ட இடமாகவும் காணப்படுகின்றமையினால் அது பொருத்தமற்ற இடமாக காணப்படுகின்றது.

இதனால் கழிவுகளை எங்கே கொட்டுவது என்ற பிரச்சினை தற்போது காணப்படுகிறது. இது குறித்து பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்கவின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. மேலும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளடங்கலாக சகல தரப்பினரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இதுவரை தீர்க்கமான முடிவு எதுவும் எட்டப்படவில்லை. தற்போது மன்னார் தள்ளாடி இராணுவ முகாமுக்கு அண்மையில் அமைந்துள்ள ஒரு பகுதி அதில் ஏற்கனவே கழிவுகள் கொட்டப்படும் இடமாக காணப்படுகின்றது. அந்தப் பகுதி வன ஜீவராசிகள் திணைக்களத்திற்கு அடையாளப்படுத்தப்பட்ட இடமாக உள்ளது.

அதை விட பாப்பாமோட்டை க்கு அருகில் உள்ள ஓர் இடமும் அடையாளம் காணப்பட்டுள்ளது. தற்போது உரிய தரப்பினர் ஊடாக அந்த இடத்தை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்த இடங்களைப் பார்வையிட்டு இணக்கமான முறையில் பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான இடங்களை பெற்றுக் கொள்ளும் வகையில் நிரந்தரமான குப்பைகளை கொட்ட முடியும்.

தற்போது மாவட்டச் செயலகத்திற்கு முன் கழிவுகளுடன் வாகனங்கள் நிறுத்தப்பட்டு உள்ளமையினால் மாவட்ட செயலக வளாகத்தில் துர்நாற்றம் வீசுகிறது. இதனால் தொற்று நோய் ஏற்படக் கூடிய அபாய நிலையும் ஏற்பட்டுள்ளது.

எனவே இதற்கான நிரந்தர தீர்வை பெற்றுக்கொடுக்க அனைவரும் முன்வர வேண்டும். – என அவர் மேலும் தெரிவித்தார்.






# பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குறித்து திருமலையில் விசேட நிகழ்ச்சித் திட்டம்

**(எஸ்.கீதபொன்கலன்)**

கல்வி அமைச்சு மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை இணைந்து நடாத்திய பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழு தொடர்பான நிகழ்ச்சி நேற்று திருகோணமலை மாவட்ட செயலகப் பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் டபிள்யூ. ஜி.எம். ஹேமந்த குமார தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாடசாலை அதிபர்கள் பங்குபற்றினர்.

பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழு பற்றிய அறிமுக உரை, மாவட்ட உள சமூக உத்தியோகத்தர் மு.மு.ஸம்ஸிதால் நிகழ்த்தப்பட்டது.

“சிறுவர் பாதுகாப்புக் குழுவின் வலுவூட்டல் மற்றும் பாடசாலயில் அதனை நடைமுறைப்படுத்தல்“ என்ற தலைப்பில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதி கல்விப் பணிப்பாளர் சுதர்சனால் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

அதனைத்தொடர்ந்து கடந்த 2024 ஆம் ஆண்டு பாடசாலை சிறுவர் பாதுகாப்பு குழுவினுடைய வினைத்திறனான செயற்பாடு தொடர்பாக,வலயக்கல்வி பணிமனையின் உத்தியோகத்தர், மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் இணைந்து மேற்கொண்ட மதிப்பீட்டுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.





# மன்னாரில் படகையும் இயந்திரத்தையும் அபகரித்து இந்தியாவுக்குத் தப்பியவர்!

(மன்னார் நிருபர்)


மன்னார் எமில் நகர் பகுதியில் வசித்து வந்த நபர் ஒருவர் பனங்கட்டிக் கொட்டு பெரிய பாலத்தடியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகு ஒன்றையும் இயந்திரத்தையும் திருடிக் கொண்டு நேற்று முன்தினம் தமிழ் நாட்டுக்குத் தப்பிச் சென்றுள்ளார் எனத் தெரிய வருகிறது .

நேற்றைய தினம் இந்த நபர் பயணித்த படகு தமிழ்நாடு மண்டபம் மரைக்கார் பட்டினம் கடற்கரையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது.

தப்பிச் சென்ற நபர் தொடர்பாக எந்த தகவல்களும் வெளியாகவில்லை .

இந்த நபருக்குக் குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக நீதிமன்றத்தில் வழக்குகள் இருக்கின்றன எனவும் இந்த வழக்குகளில் இருந்து தப்பிப்பதற்காக அவர் இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார் எனவும் மேலதிக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நபர் இரண்டு தொழிலாளர்களின் படகு மற்றும் இயந்திரத்தைத் திருடிச் சென்றுள்ளமையினால் அந்த இரண்டு குடும்பத்தினரும் தொழில் செய்ய முடியாமல் பாதிக்கப் பட்டுள்ளார்கள் என்று தெரிவிக்கப்பட்டது








# பழனிசாமி, சீமான் வீடுகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுப்பு



சென்னையில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, நாம் தமிழர் கட்சித் தலைமை ஒருங்கிணைப் பாளர் சீமான் வீடுகள் மற்றும் இளைய ராஜாவின் அலுவலகம் ஆகிய இடங் களுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக் கப்பட்டது.

டி.ஜி.பி. அலுவலகத்துக்கு இ-மெயில் ஒன்று வந்தது. அதில் கர்நாடக மாநில முதல்வர் சித்தராமையா, துணை முதல்வர் டி.கே.சிவகுமார், தமிழக எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி, நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் ஆகியோ ரின் வீடுகளில் வெடிகுண்டு வைத்துள் ளதாகவும், அது சிறிது நேரத்தில் வெடித் துச் சிதறும் எனவும் குறிப்பிடப்பட்டி ருந்தது. அதேபோல, கோடம்பாக்கத்தில் உள்ள இசையமைப்பாளர் இளைய ராஜாவின் அலுவலகத்துக்கும் வெடி குண்டு மிரட்டல் விடுக்கப்பட்டிருந்தது.

இதுகுறித்து உயர் பொலிஸ் அதிகா ரிகளுக்கு உடனடியாக தகவல் தெரி விக்கப்பட்டது. இதையடுத்து பொலி ஸார் சென்னை கிரீன்வேஸ் சாலை யில் உள்ள பழனிசாமி வீடு, நீலாங் கரையில் உள்ள சீமான் வீடு ஆகிய இடங்களுக்கு வெடிகுண்டுகளை கண் டறிந்து அகற்றும் நிபுணர்கள் மற்றும் மோப்ப நாய்களுடன் சென்று சோதனை நடத்தினர்.

இதேபோல், இளையராஜா அலுவல கத்திலும் சோதனை நடத்தப்பட்டது. பல மணி நேரம் நடந்த சோதனையில் சந்தேகப்படும்படியான எந்த மர்ம பொருளும் கண்டெடுக்கப்படவில்லை. எனவே, புரளி கிளப்பும் வகையில் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது உறுதி செய்யப்பட்டது.

மேலும், கர்நாடக முதல்வர் வீட் டுக்கு விடுக்கப்பட்ட வெடிகுண்டு மிரட்டல் குறித்து அம்மாநில பொலி ஸாருக்கும் தெரிவிக்கப்பட்டது. இதை யடுத்து அம்மாநில பொலிஸார் வெடிகுண்டு நிபுணர்கள் உதவியுடன் கர்நாடக முதல்வர் சித்தராமையா, துணை முதல்வர் டி.கே.சிவகுமார் வீட்டிலும் சோதனை நடத்தினர். அங்கும் எந்த மர்மப் பொருள்களும் கண்டெடுக்கப்படவில்லை. எனவே அதுவும் புரளி என உறுதி செய்யப் பட்டது.

இந்த மிரட்டல் குறித்து பொலிஸார் வழக்குப் பதிந்து விசாரணை மேற் கொண்டுள்ளனர். இதுபோன்று புரளி யைக் கிளப்பும் கும்பல் வெளிநாட்டில் இருந்து செயல்படுவதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது. அவர்களை கைது செய்யும் நடவடிக் கையை தமிழக பொலிஸ் அதிகாரிகள் முடுக்கிவிட்டுள்ளனர்.

தமிழகத்தில் அண்மைக்காலமாக நாள்தோறும் வெடிகுண்டு மிரட்டல்கள் விடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக பாடசாலைகள், வணிக நிறுவனங்கள், விமான நிலையங்கள், முதல்வர், அமைச்சர்கள் வீடு, கட்சி அலுவல கங்கள், டி.ஜி.பி. அலுவலகம், பல் கலைக்கழகங்கள் மற்றும் நடிகர், நடிகைகள் உள்ளிட்டோர் வீடுகளுக்கும் வெடிகுண்டு மிரட்டல்கள் விடுக்கப் பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

# விசாகப்பட்டினத்தில் கூகுள் ஏ.ஐ. மையம்!

## பிரதமரிடம் விவரித்தார் சுந்தர் பிச்சை



விசாகப்பட்டினத்தில் 15 பில்லியன் டொலர் மதிப்பீட்டில் கூகுள் அமைக்க உள்ள செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ) மையம் குறித்து அதன் தலைமைச் செயல் அதிகாரி சுந்தர் பிச்சை, பிரதமர் நரேந்திர மோடியிடம் விளக்கினார்.

அமெரிக்காவுக்கு வெளியே உலகின் மிகப் பெரிய செயற்கை நுண்ணறிவு மையத்தை கூகுள் நிறுவனம் அமைக்க உள்ளது. இந்தியா வந்துள்ள கூகுள் தலைமை செயல் அதிகாரி சுந்தர் பிச்சை, பிரதமர் நரேந்திர மோடியை டில்லியில் சந்தித்து இந்த திட்டம் குறித்து விவரித்தார்.

பின்னர் இது தொடர்பாக அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில்,

“விசாகப்பட்டினத்தில் முதன்முத லாக அமைக்கப்படும் கூகுள் ஏ.ஐ. மையம் குறித்த எங்கள் திட்டங்களை, பிரதமர் நரேந்திர மோடியுடன் பகிர்ந்து கொண் டதில் மகிழ்ச்சி அடைகிறேன். இது ஒரு மைல்கல் வளர்ச்சி.

இந்த மையம் ஜிகாவாட் அளவி லான கணினி திறன், ஒரு புதிய சர்வ தேச நீர்மூழ்கி நுழைவு வாயில், பெரிய அளவிலான எரிசக்தி உள்கட்டமைப்பு ஆகியவற்றை ஒருங்கிணைக்கிறது. இதன்மூலம், இந்தியாவில் உள்ள நிறுவனங்கள் மற்றம் பயனர்களுக்கு எங்கள் தொழில்முறை முன்னணி தொழில்நுட்பத்தைக் கொண்டு செல் லும். செயற்கை நுண்ணறிவு கண்டு பிடிப்புகளை துரதப்படுத்துவோம். மேலும், நாடு முழுவதும் வளர்ச்சிக்கான உந்துதலை அளிப்போம்” என தெரி வித்துள்ளார்.

சுந்தர் பிச்சை உடனான சந்திப்பு குறித்து பிரதமர் மோடி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

“ஆந்திரப் பிரதேசத்தின் துடிப்பான நகரமான விசாகப்பட்டினத்தில் கூகுள் செயற்கை நுண்ணறிவு மையத்தை தொடங்குவதில் மகிழ்ச்சி. ஜிகாவாட் அளவிலான தரவு மைய உள்கட்ட மைப்பை உள்ளடக்கிய இந்த பன்முக முதலீடு, வளர்ச்சி அடைந்த பாரதம் எனும் எங்களின் தொலைநோக்குத் திட்டத்தோடு ஒத்துப்போகிறது.

தொழில்நுட்பத்தை ஜனநாயகப்படுத்துவதில் இது ஒரு மிகப்பெரிய சக்தியாக இருக்கும். இது அனைவருக்கும் செயற்கை நுண்ண றிவை உறுதி செய்யும். நமது குடிமக்க ளுக்கு அதிநவீன கருவிகளை வழங் கும். நமது டிஜிட்டல் பொருளாதாரத்தை மேம்படுத்தும். மேலும், உலகளாவிய தொழில்நுட்ப தலைவர் என்ற இந்தி யாவின் இடத்தைப் பாதுகாக்கும்.” என தெரிவித்துள்ளார்.





# மடகஸ்காரில் மக்கள் போராட்டம் தீவிரம்; நாட்டை விட்டு தப்பியோடினார் ஜனாதிபதி

மடகஸ்காரில் ஜனாதிபதி அண்ட்ரே ரஜோலினாவுக்கு எதிரான மக்கள் போராட்டம் தீவிரமடைந்த நிலையில், அவர் நாட்டை விட்டு தப்பியோடியுள்ளார்.

கடந்த செப்டம்பர் 25 ஆம் திகதி ஆரம்பித்த இந்தப் போராட்டம், ஜனாதிபதி ரஜோலினா தலைமையிலான அரசுக்கு எதிராகத் திரும்பியது. பொதுமக்கள் ஊழல், வறுமை, மின்வெட்டு, தண்ணீர் தட்டுப்பாடு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின்போது, அந்நாட்டு இராணுவத்தின் முக்கியமான படைப்பிரிவான கெப்செட் , ஜனாதிபதியின்



உத்தரவுகளை ஏற்க மறுத்து, அரசுக்கு எதிராகத் திரும்பியது. இது அந்நாட்டு ஜனாதிபதிக்கு மிகப்பெரிய பின்னடைவை ஏற்படுத்தியது.

போராட்டம் தீவிரமடைந்த நிலையில், ஜனாதிபதி ரஜோலினா பிரான்ஸ் இராணுவ விமானத்தில் நாட்டை விட்டு வெளியேறி தப்பிச் சென்றுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

ஜனாதிபதி, தப்பியோடியதைத் தொடர்ந்து, இராணுவத்தின் கெப்செட் படைப்பிரிவு நாட்டின் பல்வேறு முக்கியப் பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மடகஸ்கார் முன்னர் பிரான்ஸின் காலனி ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. காலனி ஆதிக்கத்தில் இருந்து விடுதலை பெற்ற பின்னரும், பிரான்ஸ் தனது படைவீரர்களை அங்கு நிலை நிறுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



### இஸ்ரேல் - ஹமாஸ் போர் நிறுத்தம்:

# பணயக்கைதிகளின் பரிமாற்றத்துக்குப் பின்னர் நிச்சமற்ற நிலையில் அடுத்தகட்ட நடவடிக்கை

இஸ்ரேல் - ஹமாஸ் போர் நிறுத்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியான பணயக்கைதிகளின் பரிமாற்றத்துக்குப் பின்னர் அடுத்தகட்ட நடவடிக்கைகள் நிச்சமற்றதாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

20 உயிருள்ள இஸ்ரேலிய பணயக் கைதிகளும் நூற்றுக்கணக்கான பாலஸ்தீனக் கைதிகளும் தங்கள் குடும்பத்தினருடன் நேற்று முன்தினம் மீண்டும் இணைக்கப்பட்டனர்.

அத்துடன், ஹமாஸால் திருப்பி அனுப்பப்பட்ட 4 பணயக்கைதிகளின் உடலங்களை அடையாளம் கண்டுள்ளதாக இஸ்ரேலும் தெரிவித்துள்ளது.

இந்தநிலையில், மேலும் 24 பணயக்கைதிகளின் உடலங்கள் இன்னும் ஹமாஸினால், திருப்பி அனுப்பப்படாமை குறித்து இறந்தவர்களின் குடும்பங்கள் தமது கோபத்தை வெளிப்படுத்தியுள்ளன.

இதேவேளை, காசாவில், கிழக்கு காசா நகரத்திலும் கான் யூனிஸின் கிழக்கிலும் மேற்று இரண்டு தனித் தனி சம்பவங்களில் இஸ்ரேலிய துப்பாக்கிச் சூட்டில் ஏழு பேர் கொல்லப்பட்டனர் என பாலஸ்தீன சிவில் பாதுகாப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில், போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான தனது திட்டம் குறித்த அடுத்த கட்ட பேச்சுவார்த்தைகள் நடந்து வருகின்றன என டொனால்ட் ட்ரம்ப் கூறுகிறார்.

ஆனால், அவை எப்படி, எங்கு, எப்போது மேற்கொள்ளப்படும் என்பது குறித்து இன்னும் எந்த விபரங்களும் வெளியாகவில்லை.

# இன்றைய ராசி பலன்கள் -15.10.2025




இன்று கடினமான சூழ்நிலைகளை சந்திக்க நேரலாம். நீங்கள் இதில் முழு ஆற்றலையும் செலுத்த வேண்டியிருக்கும். பொழுதுபோக்கிற்கென சிறிது நேரமே ஒதுக்க வேண்டியிருக்கும். நீங்கள் இன்று அமைதியாக இருக்க வேண்டும்.

நீங்கள் கூடுதல் பொறுப்புகளை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் காணப்படும். இது உங்களுக்கு வருத்தம் அளிக்கும். மேலும் நீங்கள் பணிகளை கவனமாக கையாள வேண்டியிருக்கும்.

உங்கள் துணையுடன் பேசும் போது உங்கள் பேச்சில் கவனம் வேண்டும். உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும் வகையில் கவனமற்ற வார்த்தைகளை நீங்கள் பேச வாய்ப்புள்ளதால் கவனமாக இருக்க வேண்டும்.




இன்று நீங்கள் சௌகரியமாக உணர்வீர்கள். இனிமையான வார்த்தைகள் மூலம் நீங்கள் பலனடைவீர்கள். இதனால் உங்கள் தன்னம்பிக்கை வளரும்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க சாத்தியமாகலாம். நீங்கள் உங்கள் மன உறுதியால் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நேர்மையான நம்பிக்கையான உறவு கொண்டிருப்பீர்கள். இன்று மிகுந்த மகிழ்ச்சியும் திருப்தியும் காணப்படும்.

இன்று நிதியில் ஸ்திரத்தன்மை காணப்படும். உங்கள் சொத்து அதிகரிப்பதற்கான வாய்ப்பு உள்ளது. முக்கிய முதலீடுகளில் பங்கு கொள்வதன் மூலம் லாபம் பெறலாம்.




இன்று உங்கள் மனதில் தெளிவு காணப்படும். இதனால் உங்கள் செயல்களை திறமையாக ஆற்றுவீர்கள். பொருத்தமான செயல்களை செய்து உங்கள் நிலையை மேம்படுத்துவீர்கள். இனிமையான வார்த்தைகள் உங்களுக்கு பல நல்ல பலன்களை அளிக்கும்.

பணியிடத்தில் வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் கடின உழைப்பிற்கு பதவி உயர்வு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் வெளிப்படையாக கருத்துக்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் குடும்ப வளர்ச்சி பற்றிய ஆலோசனை நடத்துவீர்கள்.




இன்று பதட்டமான சூழ்நிலை காணப்படும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் அமைதியை உணர்வீர்கள். கூடுதல் பொறுப்புகள் உங்களுக்கு கவலை அளிக்கும். இரவில் தூக்கமின்மை காணப்படும்.

நீங்கள் சிறந்த பலனைக் காண மிகக் கடினமாக உழைக்க வேண்டும். உங்கள் பணியில் வெற்றி பெற நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க வேண்டும். இந்த அனுபவம் திருப்தி அளிக்கும்.

உங்கள் துணையுடன் அகந்தைப் போக்கை வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.




இன்று அதிருப்தியான நிலை காணப்படும். அனுசரணையான போக்கு உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தரும். சிறந்த பலன் காண உங்கள் தன்னம்பிக்கையை அதிகரித்துக் கொள்ள வேண்டும். உங்கள் எதிர்காலத்திற்காக நீங்கள் திட்டமிட வேண்டும்.

சக பணியாளர்களுடன் நல்லுறவு பராமரிக்க நீங்கள் முயற்சி எடுக்க வேண்டும். பணியில் கவனமாக இருப்பதன் மூலம் தவறுகள் நேராமல் தவிர்க்கலாம். தவறுகள் செய்ய வாய்ப்புள்ளதால் கவனமாக பணியாற்றவும்.

உங்கள் துணையுடனான உறவில் மகிழ்ச்சி நிலவ வேண்டுமெனில் நீங்கள் உங்கள் துணையிடம் சகஜமாகப் பேச வேண்டும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். பல வாய்ப்புகள் உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தரும். நேரத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள். இன்றைய நாளின் பலன்கள் உங்களுக்கு திருப்தி அளிக்கும்.

நீங்கள் பொறுப்புடனும் சிரத்தையுடனும் பணியாற்றுவீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி அடைவீர்கள். கடினமான பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பேசுவீர்கள். இது உங்கள் துணையை மகிழ்விக்கும். இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.




இன்றைய நிகழ்வுகள் அனைத்தும் உங்களுக்கு சாதகமாக இருக்கும். கடினமான பணிகளையும் எளிதாக முடிப்பீர்கள். உங்கள் செயல்களில் கவனமாக இருக்க வேண்டும். இன்று நீங்கள் முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்கும். நீங்கள் சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள். மொத்தத்தில் உங்கள் செயல்திறனில் திருப்தி காணப்படும்.

உங்கள் துணையுடன் நேர்மையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.




இன்று செயல்கள் சீராக நடக்க சாதகமாக இருக்காது. இன்று அதிக பொறுப்புகள் காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும். உங்களை மகிழ்ச்சியாக வைத்திருங்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

இன்று உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. கூடுதல் பணிகள் காரணமாக திட்டமிட்டபடி பணிகளை செய்வது கடினமாக இருக்கும்.

நீங்கள் உங்கள் துணையுடன் உணர்ச்சிவசப்பட்டு நடந்து கொள்வீர்கள். உறவில் மகிழ்ச்சி நிலவ இத்தகைய போக்கை தவிர்க்க வேண்டும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் -15.10.2025




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. நீங்கள் சமநிலை இழப்பீர்கள். நற்பலன்கள் காண எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். முக்கிய முடிவுகள் இன்று சிறந்த பலன் அளிக்காது.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். பணிகள் சலிப்பூட்டுவதாக இருக்கும். நீங்கள் சிறந்த பணி மாற்றம் விரும்புவீர்கள். அது இன்று சாத்தியமில்லை.

கடுமையான வார்த்தைகள் மற்றும் செயல்கள் உங்கள் துணையின் மனதில் காயத்தை ஏற்படுத்தும். இதனால் உறவின் ஸ்திரத்தன்மை பாதிக்கும்.

இன்று அதிக செலவுகள் செய்ய நேரலாம்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. அஜாக்கிரதை மற்றும் கவனமின்மை காரணமாக உங்களுக்கு வளர்ச்சி அளிக்கும் சில மதிப்பு மிக்க வாய்ப்புகளை இழப்பீர்கள்.

பணியிடத்தில் வெற்றிகள் அதிக அளவில் காணப்படாது. இதனால் பணிகள் தேங்கிக் கிடைக்கும். என்றாலும் திட்டமிட்டு பணியாற்றினால் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்கலாம்.

மனதில் உள்ள குழப்பம் காரணமாக உங்கள் துணையுடன் நல்லிணக்கம் குறைந்து காணப்படும். அற்ப காரணங்களுக்காக உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள்.

இன்று வீணான செலவுகள் காணப்படும். உங்கள் செலவுகளை கட்டுபடுத்த இயலாது.




இன்று சிறந்த வாய்ப்புகள் கிடைக்கும். முக்கிய இலக்குகளை அடைய திட்டமிடலாம். நீங்கள் எதிர்பார்த்ததை விட இன்று அதிகம் கிடைக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

பணியிடத்தில் அதிக வாய்ப்புகள் காணப்படும். நீங்கள் பணிகளை திறமையாகவும் விரைவாகவும் ஆற்றுவீர்கள். உங்கள் அணுகுமுறையில் உறுதி காணப்படும்.

நீங்கள் உங்கள் துணையுடன் சிறந்த அமைதியனா தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இன்றைய நாள் இனிமையாக சிறப்பாக இருக்கும்.

உங்களின் சேமிப்பு ஆற்றல் சிறந்த முறையில் அதிகரிக்கும். லாபம் தரும் புதிய முதலீடுகளில் நீங்கள் பங்கு பெறலாம்.




இன்று மகிழ்சிகரமான நாளாக இருக்காது. பதட்டமான சூழ்நிலை கவலை அளிக்கும். நீங்கள் சில தடைகளை சந்திப்பீர்கள். அது உங்கள் வளர்ச்சியை பாதிக்கும். சிறந்த வளர்ச்சி காண திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் மேலதிகாரியுடன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். அதிகப் பணிகளால் மகிழ்ச்சி குறையும். உங்கள் பணிகளை திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும்.

குடும்ப பிரச்சினை சிலவற்றின் காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். கருத்துள்ள பேச்சு வார்த்தைகள் மூலம் இந்த வேறுபாட்டை சரி செய்யலாம்.

# நிஷாந்த உலுகேதென்ன பிணையில் விடுவிப்பு



விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் கடற்படை தளபதி நிஷாந்த உலுகேதென்ன பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர் குருணாகல் மேல் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்ட பின்னர் பிணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டு பொத்துஹெர பகுதியில் ஒருவரை கடத்தி கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய விசாரணைகளுக்கமைய அவர் கைது செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மனுஷ நாணயக்காரவின் முன்பிணை மனு நிராகரிப்பு


முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார தாக்கல் செய்த முன்பிணை மனுவை நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவினால் தாம் கைது செய்யப்படுவதை தடுத்து முன்பிணை வழங்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று கொழும்பு பிரதம நீதவான் அசங்க எஸ் போதரகம முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, முன்னாள் அமைச்சர் இன்று இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் ஆஜராகி வாக்கு மூலம் வழங்குவாரென மனுஷ நாணயக்கார சார்பில் ஆஜரான சட்டத்தரணி அஸ்திக்க தேவேந்திர தெரிவித்தார்.

இஸ்ரேலில் விவசாயம் சார்ந்த தொழில்களுக்காக ஆட்களை அனுப்பும் விடயத்தில் ஏற்பட்ட முறைகேடுகள் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகள் தொடர்பில் தமக்கு தீங்கு விளைவிக்கும் நோக்குடன் தாம் கைது செய்யப்படவுள்ளதால் முன்பிணையில் விடுவிக்குமாறு கோரி முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார முன்பிணை மனுவை தாக்கல் செய்திருந்தார்.